தமிழ்ப் பொழில்

தஞ்சைக் கரந்தைத் தமிழ்ச் சங்கத் திங்கள் வெளியீடு

துணர்	திருவள்ளுவர் யாண்டு உயிஎ	மலர்
ருய	நளெ, கார்த்திகை, & மார்கழி (1976 — நவம்பர் — டிசம்பர் — சனவரி)	அ & சூ

சென்ற இதழின் தொடர்ச்சி.

சித்தர் - சித்தர் நூல்கள் ஒரு கண்ணோட்டம்

பேராசிரியர். ச பாலசுந்தரம்,

(துணை முதல்வர் கரந்தைப் புலவர் கல்லூரி)

சித்தர் நெறி வரலாறு :

சித்தர் நெறியென்பது கடவுட் கொள்கைகள் அதன் தொடர்பாக அமைந்த வேள்வி முதலிய வழிபாட்டுக் கொள்கைகள் சமயக் கொள்கைகள் சமயக் கோட்பாடுகளின் அடிப்படையில் வந்த சடங்கு முறைகள் இம்மை வாழ்வு கருதி அமைத்துக் கொண்ட அறம் பொருளின்பக் கொள்கைகள் ஆயவற்றை மேற்கொண்டு மக்கள் ஒழுகும் நடைமுறைகளைக் கண்டு ஆராய்ந்து அவற்றின் நன்மை தீமைகளையும் பொருத்தம் பொருத்த மின்மைகளையும் தேர்ந்து உண்மையும் நன்மையுமானவற்றைப் போற்றி ஒல்லும் வகையால் உணர்த்தி வந்த மெய்யறிவுடைய சான்றோர்கள் ஒழுகிய நெறியாகும் பிறநெறியினின்றும் இதனைப் பிரித்துணரும் பொருட்டு இதனைச் சித்தர் நெறி என அறிஞர்கள் வகுத்துரைக்கின்றனர் இந்நெறியாளரையே சித்தர் எனப் போற்றுவது தமிழக மரபாகும்

இவ்வாறு ஒரு நெறியைப் பகுத்தறிந்துணர்ந்து மேற்கொள்வதற்கு அடிப்படையாய் அமைந்திருந்த பழைய கோட்பாடுகள் யாவை? அவற்றினின்றும் இந்நெறி தோன்றக் காரணம் யாது? இவ்வினாக்களுக்குரிய பொருத்தமான உண்மையான விடைகளே சித்தர் நெறி வரலாறாகும்.

கொள்கைகள் தோன்றிய சூழல்கள் :

மக்கட் கூட்டம் விலங்கினங்களைப் போலப் புதர்களிலும் மரப் பொந்துகளிலும் மலைக்குகைகளிலும் காட்டு மிராண்டி (மரங்களையும் மரப்பொந்துகளையும் அண்டி வாழ்ந்தவர் என்பது பொருள்) களாய் வாழ்ந்த நிலையினின்றும் சிறிது சிறிதாக மாறிச் சிந்திக்கத் தொடங்கிய காலத்தில் மனிதன் இருளைக் கண்டு அஞ்சியும் வருந்தியும் பகலவனைக் கண்டு மகிழ்ந்தும் பசி முதலாய உடலின் தேவைகளை நிறைவு செய்யப் பெரிதும் துன்புற்றும் பெருங்காற்று பெருமழை. வெள்ளம், காட்டுத் தீ இடி மின்னல்களைப் பார்த்து நடுங்கியும் வியந்தும் தன் உள்ளத்திற்றோன்றிய உணர்வுகளை வெளிப்படுத்த முயன்றும் இடர்ப்பட்டிருப்பான் மனித நாகரிகம் தோன்றாத நிலையில் விலங்குபோல வாழ்ந்த மனிதன் தன் உணர்வின் தூண்டுதலால் எழுந்த சிந்தனை செயற்படத் தொடங்கிய போது பிற விலங்குகள் பறவைகள் முதலியவற்றின் வாழ்க்கையைக் கூர்ந்து நோக்கியும், உயிர்கள் இறப்பதையும் பிறப்பதையும் பார்த்து அஞ்சியும் வியந்தும் இயற்கை மாற்றங்களைக் கண்டு கண்டு குழம்பியும் அவற்றைப்பற்றி எண்ணி எண்ணி அவ்வப்போது மனிதனால் அமைத்துக் கொள்ளப்பட்டவையே பின் வளர்ந்த மைந்த கடவுட்கொள்கை முதலியவற்றிற்கு அடிப்படை எனலாம்.

அக்கொள்கைகளின் வளர்ச்சியே சமுதாயக் கொள்கைகள் எனலாம். முதற்கண் தோன்றியது கடவுட் கொள்கையேயாம் அதன்பின் சமுதாய அமைப்பும் அதன்பின் குடும்ப அமைப்பும் தோன்ற, இவற்றைக் கடைப்பிடித்தொழுகுவதற்காக ஏற்படுத்திக்கொண்டவையே கட்டுப்பாடு ஒழுக்கம் முதலிய விதிமுறைகள் எனலாம். பின்னர் நாளடைவில் அறிவு பெருகப் பெருக நாகரிகமும் பண்பாடும் செழிப்புற்றுச் சிந்தனைத் தெளிவுற்ற மக்கள் முன்னர் அமைத்துக் கொண்ட கொள்கைகளினின்றும் மாறி மாறிச் செம்மையுற்று வளர்ந்து வந்திருக்கவேண்டும்

மக்களின் அறிவும் சிந்தனையும் அவர் தம் உடலமைப்பைப் போலவே ஒற்றுமையும் வேற்றுமையும் உடையவாக இருக்கும் அறிவும் சிந்தனையும் நுண் கருவிகளாதலின் அக்கருவிகளின் துணையால் ஒரு காலத்தில் சில சூழ் நிலைகள் காரணமாக ஒரு சில மக்களால் முடிவு செய்யப்பெற்ற கோட்பாடுகள் அக்காலத்திலேயே அவர்களுக்கிடையிலேயே ஒரு சிலரால் மறுக்கப்படுதலும், சிலரால் ஏற்கப்படுதலும் இயல்பாகும். எடுத்துக்காட்டாக ஒன்றை நோக்குவோம்.

இரவுப் பொழுதில் விலங்கு முதலியவற்றிற்கு அஞ்சித் துன்புற்ற மனிதன். பகலவன் தோன்றியவுடனே அது தனக்குப் பாதுகாப்பையும் இன்பத்தையும் தரவல்லது என்றும் எல்லா ஆற்றலும் உடையதென்றும் கருதி அதனை வணங்கித் தன்னுலானதை அது உவக்குமாறு செய்ய வேண்டுமென்று முடிவு செய்திருப்பான். இம்முடிபினை அவனைச் சூழ்ந்தமைந்த பலர் ஏற்றிருக்கலாம் அவர்களிடையே ஒருவன் மேலுஞ் சிறிது சிந்தித்துப் பகலவனுக்கு எல்லா ஆற்றலும் இல்லை. அதனை இருள் வென்று விடுகிறது மேகங்களால் மறைக்கப்படுகிறது. எனவே அதற்கப்பாலும் அதனை இயக்கவல்ல ஒரு பொருள் மேலே இருத்தல் வேண்டும் என்று மறுத்திருக்கலாம் மற்றொருவன் மேலே நம் கண்ணுக்குத் தெரியாமல் ஒன்று இருப்பதை ஒப்புக்கொள்ள முடியாது கதிரவனை வெல்லக்கூடிய ஆற்றல் இருளுக்கிருப்பதனால் இருள்தான் பெரு வலிமை படைத்தது அதனையே வணங்கி வழிபடலாம் எனத் திருத்தங் கூறியிருக்கலாம். இப்படி ஒரு சில காரணங்களைக் காட்டி நாட்டப்பெறுங் கொள்கைகளை அக்காரணங்களை ஆராய்ந்து ஏற்பதும் மறுப்பதும் அறிவின் இயல்பாகும் காரணங்கள் வலிமையற்றனவாயின் அக்கொள்கைகளும் வலியிழந்து மறைந்துவிடும்.

கோட்பாடுகள் யாவும் காண்டல் முதலிய அளவைகளான் அமைக்கப்படுவனவாதலின் அவற்றைக் கொள்ளவும் தள்ளவும் அவ்வளவைகளே காரணமாகின்றன மனித நாகரிகம் வளர வளர அறிவும் சிந்தையும் வளமுற்று எழுத்தறிவு தோன்றிய காலத்தில் ஒருவருடைய சிந்தனை மற்றொருவருக்குக் கால இட வேற்றுமைகளைக் கடந்து புலப்படத் தொடங்கியதால் மக்களின் சிந்தை பகுத்தறிதலாய செய்யுணர்வின் வழிச்செல்லத் தொடங்கியிருக்குமெனலாம் இந்நிலையில் புலனுசைகளைக் கட்டுப்படுத்தி நடுவு நிலையோடு சிந்திக்கத் தொடங்கிய பெருமக்கள் இரவும் பகலும் ஒருநிலை நில்லாது இயங்கிவரும் உலகத்தில் யாக்கை முதலியவற்றின் நிலையாமையையும் மனவேறுபாடுகளால் வரும் இன்பத் துன்பங்களின் மாறுபாடுகளையும் கூர்ந்து நோக்கி இடர்ப்பாடுகளே மிக்க இவ்வுலகில் வாழ்வில் இன்பத்தையும் அமைதியையும் பெறுவதற்கு வழியாது ஆய்ந்தாய்ந்து அளவைகளான் உறுதி செய்து கொண்ட கொள்கைகளே சித்தாந்தங்களாகி வழங்கி வருகின்றன எனலாம். சமய முதலிய எல்லாத் துறைகளிலும் சித்தாந்தங்கள் உள இச்சித்தாந்தங்கள் ஒருவராலுரைக்கப்பட்டனவும் ஒரு குழுவினரால் உரைக்கப்பட்டனவும் என இருவகையாக இன்றைய உலகில் காணப்படுகின்றன.

சித்தாந்தங்களுள் கடவுட் கொள்கைபற்றிய சித்தாந்தத்தின் தொடர்பாகக் கொள்ளப்பெறுபவை எல்லாம் வல்லதொரு பரம் பொருள் - சீவன் அல்லது ஆன்மா (உயிர்) நல்வினை தீவினை கள் இவற்றின் பயனாக வரும் மோட்சம் நரகம் மறுபிறப்பு [சில மதங்கள் மறுபிறப்பினை ஒப்பவில்லை பாரதத்தில் தோன்றிய மதங்கள் யாவும் ஒப்புகின்றன] வீடு பேறு அல்லது முத்தி (பிறவா நிலை) மாயை அல்லது மும்மலங்கள் (சாத்தான் — பிசாசு என்பவையும் இதனைப் போன்றதே) தேவ தூதர்கள் அல்லது குருநாதர்கள் இவை யாவும் மறுமை வாழ்வு பற்றி இம்மையில் அமைத்துக் கொண்டவை.

இம்மை வாழ்வு பற்றி அமைத்துக்கொண்ட சித்தாந்தங் களின் தொடர்பாக மேற்கொள்ளப் பெறுபவை அறம் பொருள் இன்பம் கோட்பாடுகள் இவற்றுள் அறம் இல்லறம் துறவறம் என இரு பகுப்புடையது இவை பற்றிய நடைமுறை ஒழுக்க விதிகள். சடங்கு முறைகள் (சமயங்கள் தொறும் சடங்குகள் சிற்சில வேறுபாடுடையவை) அறம் ஈதலும் ஒழுக்கமும் என இரண்டினுள் அடங்கும் பொருள பற்றிய கொள்கைகளுள் பொதுவானவை இயற்றல் ஈட்டல் காத்தல் பகுத்தளித்தல். இந்நான்கையும் இவ்விவ்வாறு செயல் வேண்டுமென்பதில் அறக்கோட்பாடுகள் உள அவையே ஈண்டுச் சித்தாந்தம் எனக் கொள்ளப்படும் இன்பத் துறையிலும் கணவன் மனைவி என்னும் பகுப்பில் அமைந்துள்ள அறக்கோட்பாடுகளாகிய சித்தாந்தம் இம்முப்பொருள் பற்றிய சித்தாந்தங்கள் சமயங்கள் தொறும் சிறிது சிறிது வேறுபடினும் அடிப்படையில் ஒன்றாகவே அமைந் துள்ளன.

இனி இம்மைக்கும் மறுமைக்கும் உரியவாக உள்ள சில கோட்பாடுகள். நோன்பு—தவம் — ஆலய வழிபாடு — வேள்வி உயிர்கள் இன்புறத் தன்னலமற்ற தொண்டு புரிதல் என்பன வாம் இவையும் நடைமுறையில் சமயங்கள் தொறும் சிறிது வேறுபடுமேனும் அடிப்படை ஒன்றேயாம்.

இவை யாவற்றையும் அடக்கி நிற்பதே மதம் என்பது. சமயம் என்ற சொல் மதத்தைக் குறிப்பது இலக்கணை வழக் காலாகியது. மதம் என்பதற்கு மதியால் ஆராய்ந்து அமைத் துக்கொண்ட கொள்கை என்பது பொருள் சமயம் என்பது அவ்வாறு கொண்ட கொள்கையினை வகுத்து ஒழுகுவதற்கு ஏற்பச் சமைத்துக்கொள்ளப்பட்டது என்னும் பொருள் தருவ

தாகும், தமிழறிஞர்கள் சிலர் மதம் என்பது வடசொல் எனக் கருதி சமயம் என்னும் சொல்லைக் கையாளுகின்றனர். மதி என்பதற்கு அளவு என்பது பழந் தமிழ்ப் பொருள் இதற்குரிய வடசொல் பிரமாணம் என்பதாகும். ஒவ்வொரு கலையாகக் கூடியும் குறைந்தும் (ஸ்திதி—நிலை) கால அளவையைக் காட்டுதலால் திங்கள் மதியென்று வழங்கப்படுகின்றது (இதன் விரிவு சொல்லாய்வுக் கட்டுரையில் காண்க.)

இவ்வாறு உலகில் தோன்றிய ஆதிமதங்களில் முரண்பட்டுத் திருத்தமும் சேர்க்கையும் நீக்கமும் செய்ய மூற்பட்ட நிலையில் கிளைத்தவைகளே இற்றைக்குக் காணப்பெறும் பல்வேறு மதங்கள் அல்லது சமயங்கள் எனலாம். எனவே காலந்தொறும் சமய சமுதாயக் கொள்கைகளில் மாற்றத்தையும் தேற்றத்தையும் விரும்பிச் சான்றோர்கள் செயல்படுவதும் அவ்வாறு விரும்பாதவர்களையும் தெளிவுபடுத்த முயல்வதும் அம்மெய்யறிவாளர்கள் தம் கடமைகளாகக் கொண்டொழுகி வந்தனர் எனப் புலப்படுகின்றது

ஒரு காலத்துச் சில கொள்கைகளும் நடைமுறையும் அக்காலத்திற்கும் மக்கள் சமுதாய அமைப்பிற்கும் ஒத்தனவாகவும் சிறந்தனவாகவும் இருந்து மற்றொரு காலத்திற்கு அவை ஒவ்வாதனவாய் முரண்பட்டு வேண்டாத விளைவுகளை உண்டாக்குமாயின் அவற்றை மாற்றியமைக்க வேண்டியதும் அவ் அருளாளர் பொறுப்பாகின்றது அத்தகு பழைய கோட்பாடுகளால் ஊதியமும் மதிப்பும் செல்வாக்கும் பெற்றவர்கள் தன்னலங் கருதி எதிர்முகமாகுங்கால் அவர்தம் கரவு மொழிகளினின்றும் மக்களைக் காப்பாற்ற அவர் தம் பொய்மையான வேடங்களைச் சுட்டிக் காட்டியும் இடித்துரைத்தும் மெய்ம்மை விளக்குவதும் அப்பெரியவர்களின் தொண்டாகின்றது மற்றும் ஒரு சமயக் கோட்பாட்டினை மேற்கொண்டு ஒழுகுபவர் அதன் அடிப்படைத் தத்துவ நுண்மைகளை மறந்து புறச்செயலாய சடங்கு முதலியவற்றையே நம்பி உண்மைப் பயனை இழக்க நேரின் அவர்களையும் இடித்துரைத்துத் திருத்துதல் அச்சான்றோர்களின் கடமையாகின்றது. இனிக் கொள்கைகளை கண்ணை மூடிக்கொண்டு பின்பற்றுவதோடு அதன் மாட்டு மிக்கதொரு வெறியுணர்வை வளர்த்துக் கொண்டு அதனால் பிற கொள்கையுடையாருக்கு இடையூறு செய்ய முற்படுங்கால் அவர் தம் முறையிலேயே அவர்களை எதிர்த்து வாதிட்டு அறிவு புகட்டுதலும் அப்பகுத்தறிவாளரின் பொறுப்பாகின்றது.

இன்னோரன்ன முரண்பாடுமிக்க மக்களுக்கிடையே மெய்ம்மையை நிலைநாட்டக் காலந்தொறும் செயலாற்றி வந்தவர்களே —வருபவர்களே இங்குப் பேசப்பெறும் சித்தர்களாவர். இத்தகையோரை ஒவ்வொரு கோணத்திற் காணும் அறிஞர்கள் அவர்களை அடியார்கள் என்றும் இறைவன் தூதுவர்கள் என்றும் கடவுள் அவதாரம் என்றும்—தெய்வீக ஆற்றல்பெற்ற முனிவர்கள் என்றும் எல்லாச் சித்திகளும் கைவந்த ஞானிகள் என்றும் சமய சமுதாய சீர்த்திருத்தவாதிகள் என்றும் பகுத்தறிவாளர்கள் என்றும் கூறுகிறார்கள் பகுத்தறிவாளர்கள் வேறு கடவுட் கொள்கையை மறுக்கும் நாத்திகர்கள் வேறு இக்காலத்து ஒரு சிலர் நாத்திகவாதிகளைப் பகுத்தறிவுவாதிகள் எனக் கருதுவதும் அழைப்பதும் இரண்டற்கும் உள்ள வேறுபாடுகள் தெரியாமையே தவிர வேறன்று பகுத்தறிவு வாதம் என்பது ஒரு நெறி, நாத்திகம் என்பது ஒரு மதம் சீர்திருத்தவாதிகள் கடவுள் நம்பிக்கை உடையவர்கள்; சமுதாயக் கோட்பாடுகளில் ஈடுபாடுடையவர்கள்; சமயப் பொது நோக்குடையவர்கள்; சமயச் சார்பான வெறி உணர்வுகளுக்கும் காலத்தொடு பொருந்தாத சடங்குகளுக்கும் அப்பாற்பட்டவர்கள்; மூடநம்பிக்கையை மாற்ற முனைபவர்கள்.

இத்தகைய சீர்திருத்தவாதிகளை சித்தர்கள் எனப் போற்றுகின்றார்கள் நல்லறிவாளர்கள் என்றைக்கு மதக் கோட்பாடுகளும் சமய நெறிகளும் சமுதாய மரபு அமைப்புக்களும் தோன்றினவோ அன்றைக்கே சித்தர் நெறியும் தோன்றிற்று எனலாம் மதவாதிகளும் சமயவாதிகளும் தம் சுய நலங்கருதியோ — தம் இனநலங்கருதியோ அவரவர் கொள்கையின் உண்மைகளையும் நேர்மைகளையும் சிதைத்து வளைத்துப் போலி நம்பிக்கைகளையும் வெறியுணர்வுகளையும் அச்சுறுத்தியோ ஆசைக்காட்டியோ பரப்ப முற்பட்டபொழுதெல்லாம் அச்சமின்றி அவற்றை மறுத்தும் எதிர்த்தும் அவர்தம் வஞ்சனையை விளக்கி வெளிப்படுத்த முனைந்தவர்கள் மேற்கொண்ட நெறியே சித்தர் நெறியாகும்.

சித்தர் நெறி வரலாற்றினைத் தெளிவாகக் காண்பதற்குக் கடவுட் கொள்கையடிப்படையில் தோன்றி வளர்ந்துள்ள மதங்களின் கொள்கைகளையும் அவை ஒன்றோடொன்று முரணுவதையும் ஒரு மதத்துள்ளேயே கருத்து வேறுபாடுகளாற் றோன்றிய சமய நெறிகளையும் சுருக்கமாக முதற்கண் தெரிந்து கொள்வது நலம்.

இன்றைய உலகில் சிறப்பாகத் திகழும் மதங்களுள் முக்கிய மானவை வேத மதமாகிய இந்துமதம்—ஜைனமதம்—பௌத்த மதம் கிறித்துவமதம் இசுலாமிய மதம் ஆகிய இவையேயாம். இவற்றுள் கிறித்துவ மதமும் இசுலாமிய மதமும் வரலாற்று முறையில் முன்னைய மூன்றற்கும் பிற்பட்டவையாம் மேலும் இவை பரத கண்டத்தில் தோன்றியவையுமல்ல. சித்தர் நெறி இப்பரதகண்டத்துச் சான்றோர்கள் மேற்கொண்ட நெறியாத லின் இப்பரதகண்டத்தில் தோன்றிய வேத மத முதலிய மூன் றுமே சித்தர் நெறி தோன்றக் காரணமாக இருத்தல் வேண்டும் மற்றும் கிறித்துவ இசுலாமிய நெறிகட்குக் காலத்தால் முந்தி யது சித்தர் நெறியாதலின் இதனை அறிந்துகொள்ள உதவும் வேத மதம் முதலிய மூன்றைப் பற்றியும் அவற்றினிடமாகக் கிளைத்த பல உட்சமய நெறிகளையும் இனிச் சுருக்கமாகக் காண்போம்.

இந்துமதம் என்னும் வேதங்களை அடிப்படையாகக்கொண்ட வைதிக மதம் வரலாற்றுத் தொன்மையுடையது, முந்தியது என்ப இன்றைக்கு வைதிக மதம் எனத் தனியே ஒரு மதமில்லை, வேதங்களை அடிப்படையாகக் கொண்டு இந்தியாவில் திகழும் பல சமயங்களைச் சேர்த்து வைதிக மதம் என்கின்றூர்கள். இச் சமயங்கள் தம்முள் சிறு சிறு வேறுபாடுடையவை. வேதத்தி னின்றும் தத்துவ அடிப்படையில் பிரிந்தவை அத்வைதம் துவை தம் என இரண்டாம் இவற்றுள் அத்வைதம் சுத்தாத்வைதம் விசிட்டாத்வைதம் என மேலும் இரு பிரிவுகளாக விரிந்துள் ளது இவற்றினின்றும் கொள்கை வேறுபாடுகளால் பிரிந்த சமய நெறிகள் பலவாம் எனவே வேதங்கள் இவற்றிற்கு மூல மாய்த் தனித்து நிற்கின்றன. இனி வேதங்களுள் காணப்படும் பொருள்களைப் பார்ப்போம்.

வேதம் அனாதியானது என்றும் எழுதப்படாதது என்றும் இறைவன் வடிவானது என்றும் நித்தியமானது என்றும் இறை வனால் அருளப் பெற்றதென்றும் கூறுவர் இவ்வேதம் இருக்கு —யஜுர்—சாமம்—அதர்வம் என நான்கு பகுப்புடையது. இப் பகுப்பினைச் செப்பமுறச் செய்தவர் வியாச முனிவர். இவை ஒவ்வொன்றும் மந்திரம் பிராமணம் என இருவகையாக உணரப் படுவன, பிராமணம் என்பது மந்திரங்களை விளக்கி ஏற்க வேண்டியவை தவிர்க்க வேண்டியவை இவை இவை என உணர்த்தும் இவ்வேதங்களின் தத்துவ சாரங்களே உப நிடதங்கள் வேதப்பொருளை நன்குணரத் துணைபுரிபவை

சிட்சை, வியாகரணம், நிருத்தம், சந்தசு — சோதிடம், கல்பம் என்னும் ஆறு அங்கங்கள் இவ்வேதங்கள் ஞானகாண்டம் கர்மகாண்டம் எனப் பகுத்துணரப்படும். பெரும்பாலும் ஞான காண்டம் இறைவனைப் பற்றியும் கர்மகாண்டம் வேள்வி பற்றியும் விளக்குவனவாம் பொதுவாக நால்வகை ஆண்மைப் பேறு களையும் கூறுகின்றன. வேள்வி—வேள்வி புரிவோர் பற்றிய பிரிவின் அடிப்படையில்தான் வேதம் நான்காகப் பிரித்துணரப் படுகிறது என்று கருதுவோருமுளர். வேள்வித் தலைவர்கள் அத்வர்யு—ஹோதா—உத்தாதா—பிரம்மா என நால் வகையினர் இவர் தம் செயல்கள் முறையே, வேள்வியை முறையாக நடத் துதல்—மந்திரங்களை ஓதிக் கடவுளைத் துதித்தல்—மந்திரங்களை அசை பிரித்துக் கானத்தோடு கூட்டித் துதித்தல்—வேள்வியில் தவறு நேராமல் கண்காணித்தல் என்பனவாம். வேதம் நான்கு வருணத்தையும் அவற்றின் கலப்பினால் வரும் சாதியையும் ஒப்பு கின்றது. வேள்விகளை வற்புறுத்துகின்றது எனினும் இரு மைக்கும் நன்மை விளைத்து அறம் பொருள் இன்பம் வீடு என் னும் ஆண்மைப் பேறுகளை அடையத் துணை புரிவது எனக்கூறப் படுகின்றது. எல்லாவற்றுக்கும் மூலமான பரம்பொருள் ஒன்றே எனினும் ஐம்பூதம் முதலாக எல்லா ஆற்றல்களையும் தெய்வங் களாக வகைப்படுத்தி அவற்றுக்குரிய மந்திரங்களையும் உருவ அமைப்புக்களையும் வழிபடும் முறைகளையும் விரிவாகக் கூறுகின் றது, இறைவனும் இறைவனாற் படைக்கப்பட்ட உலகமும் உலகப் பொருளகளும் (ஆன்மா அல்லது சீவன்) என முப் பொருள் பற்றிய உண்மைகளைச் சுட்டி அவற்றின் இயல்புகளை விளக்குகிறது. உயிர் அறிவுடையது எனினும் அறிவிக்க அறி யும் தன்மையுடையதென்றும் உயிர் தனுகரணங்களைப் பெற் றுப் புண்ணிய பாவங்களை இயற்றுமென்றும் இவற்றால் பிறவி எடுக்கும் என்றும் உடலைவிட்டு உயிர் பிரிந்த பின் இன்னின்ன நிலையில் இவ்வாறு இருந்து மீண்டும் உடலோடு பிறக்கும் என்றும் இருவினையும் அற்றபோது இறைவனை அடைவதாகிய வீடு பெறும் என்றும் கூறுகிறது.

மேலும் மக்கள் பிறந்தது முதல் வருண, இன, நிலை வேறு பாடுகளுக்கு ஏற்பச் செய்யவேண்டிய சடங்குகளையும் இறந்த பின் அவர் தம் மக்களும் வழியினரும் ஆற்றவேண்டிய சடங்கு முதலிய கர்மங்களையும் அவற்றின் பயன்களையும் கூறுகின்றது. இங்கே கூறப்பெற்றவை பொதுவாக நான்கு வேதங்களிலும் காணப்பெறும் சாரமான கருத்துக்களாகும். வேதகிரந்தங்களிற் பல முனிவர்களாலும் அரசர்களாலும் செய்யப்பட்டுள்ளன.

இருக்கு முதலிய நான் மறைகளுள் காணப்பெறும் கடவுட் கொள்கைகளைத் தொகுத்து ஆராய்ந்து தேர்ந்து முடிவு செய்யப் பெற்றவையே உபநிடதங்களாகும். உபநிடதம் 1180 என்றும் 235 என்றும் 108 என்றும் கூறுவர் 108 உபநிடதங்கள் இக்காலத்துள. இவை கருத்துக்களை உணர்த்தும் முறைமையால் சில, கர்மகாண்டமென்றும் சில உபாசனா காண்டம் என்றும் சில ஞான காண்டம் என்றும் கொள்ளப்படுகின்றன.

இனி வேதங்களைச் செம்மைப்படுத்தி நான்கு கூறுகளாகச் செய்த வேதவியாசர் கடவுள் தத்துவம்பற்றி வேதசாரமாகச் செய்த நூல் பிரம சூத்திரம் பிரம சூத்திரத்தின் விளக்கம் பற்றியெழுந்தவையே அத்வைதம் சுத்தாத்வைதம் விசிட்டாத்வைதம் துவைதம் முதலிய தத்துவ மதங்கள். இத்தத்துவங்களை விளக்கி அவற்றைத் தனித்தனி மதங்களாக நிலைபெறச் செய்தவர்களே வேதங்கள் கூறும் பிறகொள்கைகளையும் உடன்பட்டுப் பல கருத்துக்களைக் கூறியுள்ளனர். ஒவ்வொருவரும் அவ்வச் சமயத் துறையில் பல நூல்களை இயற்றியுள்ளனர் கடவுளுக்குப் பெயர் முதலிய வகுத்துத் தத்தங் கடவுளரே பரம்பொருள் என விளக்க முற்பட்டுள்ளனர். இவ்வகையில் வாதப் பிரதிவாதங்களாகத் தோன்றிய நூல்கள் பல. தத்தம் கடவுட் கொள்கைகளையும் தத்துவங்களையும் உருவக வாயிலாக விளக்கப் பல புராணங்களையும் இதிகாசங்களையும் இவர்கள் படைத்துள்ளனர்—புராண இதிகாசப் படைப்புக்களுக்கும் வேதங்களே மூலமாக விளங்குகின்றன. வேதத்தினுள்ளேயே பல முனிவர்கள் அரசர்கள் வரலாறுகள் புராண முறையில் கூறப்படுகின்றன.

சமயத்தாபகர்களான இப்பெரியோர்கள் தத்தம் சமய ஒழுக்கங்களாகவும் அவற்றை ஏற்று ஒழுகவேண்டிய முறைகளாகவும் வரைந்த நூல்கள் பல அவர்களேயன்றி அவர் வழிவழி வந்த சமயத் தலைவர்களும் துணைவர்களும் சார்பாளர்களும் காலந்தொறும் வரைந்த நூல்களும் பலப்பலவாம்.

இனி வேதாந்தம் என்னும் உபநிடதங்களின் திரண்ட கருத்துக்களாவன. இறைநிலை—உயிர்நிலை உயிர் இறைவனை எய்தும் நெறி வினை—ஆண்மைப்பேறு இவ்வைந்தையும் அளவை முறையால் விளக்கப் பெற்றவையேயாம். வேதாந்தத்திற்குப் பிரம சூத்திரமும் உத்தரமீமாம்சையும், பகவத் கீதையும் வேதமும் பிரமாண நூல்கள் என்ப. இவற்றுள் தெளிவாக்கப்

படும் கொள்கைகளாவன உயிர்கட்குப் பிறவியுண்டு. ஆசைகள் கருமத்தை உண்டாக்குகின்றன. கருமத்தின் பயன் பிறவி. பிறப்பறும் நிலை முத்தி. முத்தியை அடைய வழி பரம்பொருளை உணர்தல் ஆசையறுத்தல். ஆசை நீங்க மனமாசு நீங்கும் மாசு நீங்கத் தெய்வ உணர்வு உண்டாகும் தெய்வ உணர்வு உண்டாகத் தெய்வத் தன்மை எய்தும் ஆசை நீங்குவதற்கு விருத்தி, நிவிருத்தி என இரு நெறிகளை மேற்கொள்ள வேண் டும் விருத்தி மார்க்கம் என்பது ஓராற்ருன் இல்லற நெறியைக் குறிக்கிறது அஃதாவது பற்ருேடு கூடிய நெறி. நிவிருததி மார்க்கம் என்பது துறவு நெறி. விருத்தி நெறிக்குரிய கருமங் கள் வேள்வி, வழிபாடு, கொடை, தருமம் அல்லது ஒழுக்கம். தவம் நோன்பு ஆயவை.

ஆசை, அறிவு, செயல் (இச்சாஞானக்கிரியை) களை ஒட்டி மனித இயல்பு முத்திறப்படுதலின் அவற்றின் முனைப்புகளுக் கேற்ப நெறிகளும் அமைகின்றன. அவை ஞானயோகம் பக்தி யோகம் கருமயோகம் இராசயோகம் என நான்காம இவை ஒவ்வொன்றினுள்ளும் சரியை கிரியை யோகம் ஞானம் என நான்கு படிகள உள, அவற்றுள

ஞானயோகமாவது. நான் என்பது உடலோ உயிரோ மனம் முதலிய கரணங்களோ அகங்காரமோ அன்று ஆன்மா என உணர்ந்து உண்மையைக் குருவாயிலாகத் தெரிந்து தேர்ந்து, சாக்கிர, சொப்பன, சுழுத்தி நிலையில் ஒரு படித்தாகவே இருக் கும் ஆன்ம நிலையை மெய் என அறிதல், இம்மெய்ம்மை உணர விவேகம் வைராக்கியம் சமமாதி அறு குணங்கள் முத்தியிற் பேரவா உடைமை இவை இன்றியமையதனவாம்.

பக்தியோகமாவது:— உலகப் பொருள்களின் மேலும் மக்கள் முதலிய உறவின் மேலும் எழும் காதலை ஒரு ஒருமுகமாக இறை வன் மேற் செலுத்துதல்—அழிவற்ற அழகு இனிமை அன்பு பண்பு முதலியவற்றிற்கு இறைவனே உறைவிடம் எனத் தெளிந்து இறைவன் பெருமையையும் குணத்தையும் அருட் செயல்களையும் கேட்டுச் சிந்தித்து வழிபட்டொழுகுதல் இம் முறையில் இறைவன் மேல் அன்பு முதிரமுதிரத் தான் பாவிக்கும் வடிவத்தில் எல்லா இடங்களிலும் இறைவனைக் கண்டு பேரின்ப முத்தியடைதல். இந்நிலையெய்த திருக்கோயில் வழிபாடு அடி யார் பக்தி முதலியன இன்றியமையாதனவாம்.

கருமயோகமாவது:— தத்தம் கடமைகளை விருப்பு வெறுப் பின்றிச் செய்தல்—அக்கடமைகளால் வரும் லாப நட்டங்களில் சமநிலை எய்துதல்—கருமங்களைச் செய்தல் செய்யாமையாகிய இரு நிலைகளிலும் சமநிலையுறுதல் ஆகிய மூன்று படிகளையும் கடந்து நிற்க உள்ளம் பக்குவப்பட்டு யான் கருத்தா என்னும் அகங்காரம் நீங்கி முத்தியாகிய அமைதி நிலையுறுதல்

இராசயோகமாவது:— சித்தத்தில் காமவெகுளி மயக்கத்தால் எழும் எண்ணங்களை அடக்கி அழித்தல் கரணங்களை ஒரு நெறிப்படுத்துதல் இவற்ருல் மனமாசு நீங்கி ஆன்ம ஒளிதானே வெளிப்படும். மனமாசு நீங்க இயமம் நியமம் ஆதனம் பிராணு யாமம் பிரத்தியாகாரம் தாரணை தியானம் சமாதியாகிய எண் வகை யோக நெறிகளைக் குருவாயிலாக உணர்ந்து கடைப் பிடித்தல் வேண்டும். அவ்வாறு ஒழுக இவை முறையே உடலை யும் மூச்சையும் ஒழுங்குபடுத்தி வேண்டாத நினைவுகளை அழித்து ஒன்றை நினைக்கும் திண்மையை அளித்து ஆன்ம ஒளியைக் காட்டும். அவ்வொளி முத்தியை யளிக்கும்.

இவை உபநிடதங்களின் அடிப்படையில் வந்த கொள்கை களாதலின் இவற்றை வேதாந்தம் என்று கொள்வர். இனி வியாசமுனிவர் இயற்றிய பிரமசூத்திரத்தின் விளக்கமாக எழுந்த மதங்களின் சாரமாவன.

அத்துவைதம்:— முதற்பொருளும் (பிரமம்) அதன் ஆற்ற லும் வேறுபடாது ஒன்ருக இருக்கும் நிலை சுத்தப் பிரமம் எனப்படும் அதன் ஆற்றல் அதனினிடமாக இருந்து பெருகி யாவற்றையும் உள்ளிட்டு நிற்கும்போது பரமெனப்படும். இப்பரமானது சத்துவம் இராசதம் தாமதம் என முக்குணப் பட்டுச் செயற்படும் பொழுது முறையே ஆனந்த ரூப சக்தி சித்தரூபசக்தி சத்துரூபசக்தி எனப் பிரமத்தோடு இயைந்து சுழுத்தி சுவப்பனம் சாக்கிர நிலையிலிருந்து காரியப்படும். இந் நிலையில் அப்பரம்பொருள் பரமானந்தன். பரிபூரணன், பரன் என்று வழங்கப் பெறும் இத்தகு சச்சிதானந்தப் பிரமத்திட மிருந்து மூலப்பிரகிருதி உண்டாயிற்று. இம் மூலப்பிரகிருதி யின் சத்துவ குணத்தினின்றும் சுத்தமாயையும் இராசதகுணத் திலிருந்து அவித்தையும் தாமத குணத்திலிருந்து ஆவரண —விட்சேப சக்திகளும் தோன்றின.

இனி இந்தப் பிரமமானது எல்லாமாய் அகண்டமாய் இருக்கும் நிலை சுத்தசைதன்யம் என்றும் பிரபஞ்சசிருட்டிக்குக் காரணமாய் சர்வாந்தர்யாமியாய் ஈசுவரனாய் இருக்கும் நிலை மாயாவச்சின்ன சைதன்யம் என்றும். ஆன்மாக்களாக இருக்கும் நிலை அந்தக் கரணவச்சின்ன சைதன்யம் என்றும் (ஆகாயத்திலிருக்கும் கதிரவனுக்கும் குடத்திலிருக்கும் கதிரவன் குடத்திலிருக்கும் நீரில் பிரதி பலிப்பது போலப் பிரமம் ஆன்மாக்களாகிய சீவர்களிடத்தில் பிரதிபலிக்கும் இரண்டு கதிரவனுக்கும் வேறுபாடில்லாமை போலவே பிரமத்திற்கும் சீவனுக்கும் வேறுபாடில்லை என்ப) ஞான மயமாக இருக்கும் நிலை விருத்தியவச்சின்னசைதன்யன் என்றும் உலகமும் உலகத்துள்ள இருதிணைப் பொருள்களாகவும் விளங்கும் நிலை விசயாவச்சின்ன சைதன்யம் என்றும் ஐவகை நிலையாகப் பகுத்துக் கூறுவர்.

சீவகன் முத்தி பற்றி இம்மதத்தார் கூறுவது. சீவனர்கள் குருமுகமாக வேதாந்த ஞானத்தைக் கேட்டு ஐயம் நீங்கிச் சிந்தித்துப் பொருள்கள் மாட்டுச்செல்லும் மனத்தை அடக்கி நற்செய்கை நல்லொழுக்கத்தால் பாவம் நீங்க விடுபெறுவர் என்பர். இதற்குரிய வழிகளாவன நித்தியா நித்திய வஸ்து விவேகம், இக் முத்ராார்த்த பலயோக விராகம், சமாதி சட்க சம்பத்தி முமூட்சுத்துவம் என நான்காம் பிரமம் ஒன்றே உள்ளது ஏனையவெல்லாம் அவித்தையால் ஏற்படும் மாயையே என்பது அத்வைதத்தின் முடிவான கொள்கையாகும். இம் மதக் கொள்கை ஆதி சங்கரரால் பெரு விளக்கம் பெற்றது.

— தொடரும்.

ஐப்பசி இதழின் தொடர்ச்சி

குறளில் வீட்டியல்

K. சோமசுந்தரம், B A., B L., தஞ்சை.

அறமென்பது சிறப்பாகத் துறவறம் எனக் கருதப்பட்டாலும், அது இல்லறத்தின் வழி நின்று மனத்துக்கண் மாசிலனுதலாகும் ஒழுக்க நிலையை உடையதாய் இருத்தல் வேண்டும், அதுபோதுதான் துறவறம் இறைவனது திருவருளைத் துறவுணர்ந்து காணும் தகுதியுள்ளதாகச் சிறக்கும். துறந்த வுள்ளத்தோடு வீட்டின்பம் பெற. பழகு நெறியாகத் திருந்திய இல்லறத்தை. ஆசிரியர் திருவள்ளுவர், அன்பின்ப ஒழுக்கமென்றும். அப்பழக்கத்தின் தெளிவை, உள்ளம், உரை, உடல் ஆகிய மூவிடத்தும் பொருந்துதற்கேற்ற விழுப்பமெனக் கொண்டு, அன்பு, அறிவு, ஆற்றல் முதலியவற்றின் கண் ஊறிய இல்லறத்து ஊற்று ஒழுக்கங்களை ஞானமுகமாக இயக்கியே, அவ்வொழுக்க முடைமைதரும் விழுப்பம் உள்ளத் துறவின் ஞானமாதலை புலப்படுத்தியுள்ளார் 'ஒழுக்கம் விழுப்பம்தரலான், என்ற குறளுக்கு. விழுப்பமென்பதற்கு ஞான நிலையினை நன்குணர்த்தும் தெய்வத் தன்மையாய சிறப்பு என பரிமேலழகர், அறிவுத் திறனை விளக்கும் வகையில் அளவை நெறியால் பொருளுரைத்ததும் கண்டு கொள்க உயிருக்கு அணியாகிய இஞ்ஞானநிலை. செப்பரும் முப்பொருளுண்மையினை மெய்யுணர்ச்சியுடன் தேறினர்க்கு எளிதே கைகூடுவதாகும்.

அன்பு அருள் இன்ப ஒழுக்கங்களுக்கு நிலக்கலனுயுள்ள இல்லறம் துறவு உள்ளமொடு நிகழுமாயின். அஃது இறைவனை நுகர்ந்து உணரும் அரிய நெறியாக வாய்க்குமென்பதை

> அறத் தாற்றின் இல்வாழ்க்கை யாற்றின் புறத்தாற்றிற்
> போஒய்ப் பெறுவது எவன்

என வான்மறை வகுத்த வள்ளுவர் மிக ஆற்றலொடு துறவறத்தின் பெருமையினைக் குன்றுவண்ணம் நிறுத்துக் கூறியது தெளிவாய் அறிதற்பாற்று. மெய்யும் மொழியும் மனத்தின் வழி ஒழுக்கமுடைமை கொண்டு இல்லறத்து நன்னெறிக் கண் அலையாது நிற்க.யான் எனது எனும் அகப்புறப் பற்றுக்களை துறக்கவேண்டுமாதலின், திருவள்ளுவர் 'வேண்டினுண்டாகத் துறக்க' என்று குற்றமில் வகையாய் கூறுவாராயினர். மற்றும் பீடுடைய வீடு

பேற்றின்பத்திற்கு காரணமாகிய இறை கழலே, அயரா அன்பால் துறவின்பம் வேண்டுவார் சார்ந்து இறையருளின்வழி நிற்ற லேயும், அறிவு அன்பு, ஆற்றல் கொண்டு தொழிற்படும் வீட் டின்ப முறையையும், 'துறந்தபின் ஈண்டு இயற்பாலபல' (342) எனும் தொடரால் குறிப்பிப்பாராயினர். இறைவனது அடிதழீஇ வணங்கி நிற்கும் சிறப்பினையும் பெருமையினையும் கூறியருளும்

வேண்டுதல் வேண்டாமை இலான் அடி சேர்ந்தார்க்கு
யாண்டும் இடும்பை இல
மலர் மிசை ஏகினன் மாணடி சேர்ந்தார்
நில மிசை நீடு வாழ்வார்
பிறவிப் பெருங்கடல் நீந்துவர் நீந்தார்
இறைவன் அடி சேராதார்

என்ற குறட் பாக்கள், மக்களுயிர்களிடை அற ஒளியைக் காலச் செய்யும் செய் வகையினைக் காட்டி, வீடு பேற்றின்பில் நீடுவாழும் உய்வகையினைத் தெளிவிக்கும் பான்மையன, காட்சிப் பொரு ளிலும் கருத்துப் பொருளிலும் பல்வகைப் பொருட்டிறம் வாய்ந்த இக்குறட்பாக்களை கூர்ந்து சிந்திக்கின், செம்மையுள்ளமொடு இறைவனது திருவடியினைப் பயனாகக் கொண்டவருக்கு வாசி யாம் பாதமலர் தேசியாய் விளங்குவதும், அஃதே வீடாக அமையுமென்பதும் வள்ளுவச் சித்தரது உள்ளம் என்று உற் றறிந்து கொள்க.

திருவடி ஞானஞ் சிவமாக்கு விக்கும்
திருவடி ஞானஞ் சிவலோகஞ் சேர்க்கும்
திருவடி ஞானஞ் சிறைமல மீட்கும்
திருவடி ஞானமே திண்சித்தி முத்தியே

என்பதும் திரு மூலரது அருள்வாக்கு

காதற்தெய்வம் காதலர் உள்ளத்தில் பல்வேறு நிலைகளில் எத்தகையவாறு ஆட்சி புரிவதை, வள்ளுவர் நன்கு ஆய்ந்து, அவ்வுள நிகழ்ச்சிகளில் தோன்றும் தூய எண்ணங்கள் யாவும் வீட்டின்ப உண்மைத் தத்துவத்தை ஆடிபோல் காட்டும் பான் மையினைத் தம் குறணூலில் எடுத்தோதியுள்ளார் காதற் காமம் மலரின் மென்மையோடு தெய்வ மணமும் பேரின்பச் சுவையும் வாய்ந்துள்ள மாட்சியுடைய தென்னும் உண்மையினை அறிந்து,

அது வீடு பேறு பயக்கும் பயனை, விழுமிய காதலான் பெறக் கூடிய தவத்தின் மிக்கார் உலகில் ஒரு சிலராதலின், பலர் பெருர் எனத் தோன்ற, திருவள்ளுவர்

மலரினும் மெல்லிது காமம் சிலர் அதன்
செவ்விதலைப் படுவார்

என அருளி அதன் சிறப்பு மரபுத் தன்மையினை வியந்து உலகங் காண செப்புவது சற்றே சிந்தித்து உணரற் பாலது,

சிறப்பு என்பது தலையாய வீடு பேற்றின்பத்தினைக் குறிக்கும். 'எல்லாப் பேற்றினுஞ் சிறந்தமையின் வீடு 'சிறப்பு' எனப்பட்ட தென்றனர் பரிமேலழகர். வீடு சிறப்பென பொருளாதலை 'சிறந்தது பயிற்றல் இறத்த தன் பயனே' என தொல்காப்பியத்துக் கற்பியல் (51) சுட்டிக் காட்டும், சிறப்பாகிய அழகிய இயல்புடைய வீட்டுக்கு நிமித்த காரணமாய செவ்விய பொருள், எண்குணங்களையுடைய கடவுளாகு மென்பதை வள்ளுவர் உள்ளி 'சிறப்பென்னும் செம்பொருள் காண்பதறிவு' எனக் கொண்டார் எனவே பிறப்பற, வீடு பேற்றிற்கு நிமித்த காரணமாய செவ்விய பொருளின் உண்மையினை விழுப்பமுற உணர்ந்து தெளிதல் இன்றியமையாதது அச்செம்பொருள் சார்பகன்ற மெய்த் தன்மையாய் வயங்குமென்பது

'சார்பினுல் தோன்ருது தான் அறிவாய் எப்பொருட்கும்
சார்பென நின்றெஞ் ஞான்றும் இன்பம் தகைத்தரோ
வாய் மொழியான் மெய்யான் மனத்தான் அறிவிறந்த
தூய் மையதாம் மைதீர் சுடர்" (பொருள். 88)

என தொல்காப்பியத்து மேற்கோள் பாட்டால் இனிது தெளியப்படும், எனவே என்றும் உள்ளதாகிய செம்பொருளாம் இறைவனை அறிவுண்மையாலும், அவனருள் மெய்யுணர்வாலும் நுகர்வார், இறைவனது திருவடிப் பேறு மூலம் மீண்டும் பிறப்பிற்கு வாராத வழியைப் பெறுவர் என்ற குறிப்பினை

'ஓர்த்துள்ளம் உள்ளது உணரின் ஒரு தலையாப்
பேர்த்துள்ள வேண்டா பிறப்பு'

எனும் வள்ளுவரது குறட்பா நன்கு வலியுறுத்தும். ஈண்டு உள்ளது என்பது பதியெனக் கொள்ளற் குரியது உள்ளமை உணர்தல் என்பது பதியை விளக்கி பிறப்பினை அறுக்கும் பதி ஞானம். இதனைக் கருத்துடன் ஓர்ந்துணர்ந்தால் பாசமாம்

பிறப்பு நீங்கி ஒழியுமென்க மெய்யுணர்ந்தாரால் பெரிதும் விரும்பற்பாலது இறப்பிற்குரிய பிறப்பில் புகாமையாகிய பிறவாமை யாகும். 'வேண்டுங்கால் வேண்டும் பிறவாமை' என்பது வள்ளுவரது சித்தாந்தம் (362) இதனைத் திருக்களிற்றுப் படியாரில் (40)

'வேண்டுங்கால் வேண்டும் பிறவாமை என்றமையால்
வேண்டின் அஃதொன்றுமே வேண்டுவது—வேண்டினது
வேண்டாமை வேண்டவரும் என்றமையால் வேண்டிடுக
வேண்டாமை வேண்டு மவன்பால்'

என பாராட்டப்பட்ட பான்மையும் இவண் உளங்கொளற் பாலது.

சிறப்பு யாவற்றினுஞ் சிறந்த வீட்டின்பப் பேற்றினைக் குறிக்குமென்று தெய்வப் புலமைத் திருவள்ளுவர் கொண்டு அன்பின் விளைவே நிலைபேறுன இன்பமென அருள்வாராயினுர். ஆறுயிர் என் போடியைந்த உடலைப் பெறுவதின் நோக்கம் யாதெனின், அஃது அன்போடியைந்த நெறியில் நின்றெழுகி விடுதலைப் பெறும் பொருட்டேயாகும். இஃது

அன் போடியைந்த வழக்கென்ப ஆருயிர்க்கு
என் போடியைந்த தொடர்பு

என்ற வள்ளுவரது வாக்கால் உறுதிப்படும். அன்பார்ந்த வாழ்வினின்று ஒழுக்கத்துப் பண்பாடுடன் வெளிப்படுவது நல்லாற்று இன்பம், இத்தகைய இன்பத்தையுற்றுர் எய்தும் சிறப்பு, வீடு பேறகும்

'அன்புற்று அமர்ந்த வழக்கென்ப வையகத்து
இன்புற்றுர் எய்துஞ் சிறப்பு'

என்ற குறளின் வழி அன்புற்றமர்ந்த பயன் ஒருவாறு தெளியப் படும். வீட்டின்பப் பேற்றுக்கு இன்றியமையாது வேண்டப்படுவது இறைவனை மறவாத அன்பு நிலையாம். 'வேண்டாதொன்றும் வேண்டாது மிக்க அன்பு மேவுதலே' என்பது திருவாசகம், இந்நிலையில் முதிர்ச்சியான் இறை மணமுற்றுர்; தன் செயலென யாவும் கொள்ளாது மாறுத இறைபனுபவ மதை மருவிக் கொண்டே இன்பப் பண்பாய் இருப்பர் என்பது உறுதி

வீட்டின்பப் பேற்றுக்கு காரணமாவது இல்லறத்திற்குரிய இயல் அறனில் ஒன்றும் அன்பென்பதை

அன்பும் அறனும் உடைத்தாயின் இல்வாழ்க்கை
பண்பும் பயனும் அது.

என வள்ளுவர் வலியுறுத்தி, வாழ்வின் பேருகிய வீட்டின்பத்திற்குரிய அன்பார்ந்த அறனையும், பண்பார்ந்த பயனையும் உணர்த்தியுள்ளார். அன்புவழி ஆக்க மெய்தி புலன் இன்பங்களைத் துறவாது இல்லறத்தின் கண்ணின்று ஏனைய உயிர்கள் மாட்டு அருளறத்தினைப் பெருக்குவார், அக்காரணத்தால் தானெனும் நினைப்பும் தனக்கெனை விருப்பமிலாது, அவ்வைம் புனைகளையும் வென்று அடக்கும் திறல் பெறுவர். இஃதே வள்ளுவர் போற்றும் நல்லுறவாகும். துறவறத்தை இல்லறத்தை விட்டு நீங்காத தொடர்புடையதாய் வள்ளுவர் உலகின்கண் நிலவு பெறச் செய்த வகையினை உன்னற் பாலது. நல்லறமாகிய இல்லறத்தினின்றும் பக்குவப்பட்டு முகிழ்ந்து எழும் அன்பின் முதிர்ச்சியே அருளாகும். இஃதே உயிரின் பசு பாசத்துவத்தையினை நீக்கி பதித்துவம் அளிப்பதற் கண்ணுள்ளதாகிய இரக்கமுமாகும். 'அருளென்னும் அன்பீன் குழவி' என வரூஉம் வள்ளுவரது மொழியையும் ஈண்டு உணரற்பாற்று. அனபினில் தோய்ந்து அருளில் பழுத்த இத்தகைய துறவே தூய தவமென்னும் விழுமிய தமிழ்ச் செல்வமாகும். உயிர் இறுதியில் அடைய வேண்டிய உயர் வீட்டின்ப நிலையினை இத்தகைய இல்லறத் துறவு நிலை எளிதாகவும் கைவரப்பெறச் செய்வதால், இல்லறம் வேறானது துறவறம் பிறிது என வேறு படுத்திக் காட்ட இயலாத அளவில் இணைந்துள்ள இல்லறத் துறவு நிலை இனியதும் சிறந்ததுமாகுமென்க. மனமாசகன்ற இல்லறத்துறவு சிறந்தது பயிற்றலைக் குறிக்கொண்டது. சிறந்தது பயிற்றலாவது, அறத்தின்மேல் மன நிகழ்ச்சி என்பர் இளம் பூரணர். இத்தகைய துறவு இல்லறத்துக் கிழவனுக்குமே கிழத்திக்குமே பொதுவாக யிருப்பதென்பது 'அறம் புரி சுற்றமொடு கிழவனும் கிழத்தியும் சிறந்தது பயிற்றல்' என்ற தொல்காப்பியச் சூத்திரத்தால் தெளிய உணரப்படும்.

வீட்டின்பம் பெறுதற்கு மனமாசற்ற அறனின் நிறைவுடன் அன்பை வளர்த்தல் வேண்டுமென்பதும், அதற்கு இல்லற ஒழுக்கத்தைப் பெரிதும் மனம் மகிழும் முறையில் ஓம்புவதும் சிறப்பு என அறியப்பெற்றும் மனத்தில் மாசிலாது இருத்தலாகிய நுண்ணிய நிலை தனித்த வாழ்வில் இயைந்தும் பொருந்தியும் நிற்காதாதலின், அது இல்லறமாகிய ஆண் — பெண் காதல் வாழ்விற்குரிய இயற்கையோடியையும் வாழ்வில் தான்

அறநெறி வழா முறையில் தலைப்பட்டு நிற்கும் எனவே நுண்ணிய அறத்தின் பருமைதான் இல்வாழ்க்கையென வள்ளுவர் புகன்று, மனமாசுகளைத் துறக்குமாறு அறிவுறுத்தி, இல்வாழ்க்கை தவத்திலும் நோன்மையுடைத்து என்றும் குறிப்பிட்டு அருள்வாராயினர் இஃது

ஆற்றின் ஒழுக்கி அறனிழுக்கா இல்வாழ்க்கை
நோற்பாரின் நோன்மை யுடைத்து

என்ற குறட்பாட்டில் விளங்குதலைக் காண்க. உள்ளியங்குகின்ற இல்லறக் காதலன்பு அறிவொடு கலந்து அருளின்பத்தில ஊறி நின்றால் அஃதே மங்கலமாகிய இறைவனைச் சாரும் வீட்டு நெறியாகும். 'மங்கலம் என்ப மனைமாட்சி' என்கிறார் வள்ளுவர், மங்கலம், மனை, மாட்சி ஆகிய இம் மூன்றினையும் உளங்கொண்டு சிந்திப்பார்க்கு பலவித வீட்டின்பத்து கருத்து நுட்பங்கள் புலனாகும்.

துறவுத் துறையை முதற்கண் நாடாது, இல்லறத்து நெறிமுறையினை ஆற்றி, யாவர் மாட்டும் அன்புளங் கொண்டொழுகி. மனத் துறக்கமுற்று, அருளுலகங்காண ஆற்றலையுடைய உயிர் பக்குவ நிலையடைந்து இறை நிறைவால் வீடு பெறுமென்பது வள்ளுவரது சீரிய அனுபவ வேட்கையாகும் தெய்வப் புலவரென பெறற்கரும் பெயரினைப் பெற்ற பெரு நாவலர், இல்லறம் துறவறம் என இரு நெறிகள் வழி வீடுபயக்கும் ஞான நெறியினை உணர்த்தினராயினும், காமத்து இன்ப இயலில், காம நிறைவின் இச்சையினைப் பற்றிச் செப்பாது, உயிருக்கு ஊதியம் பூக்கும் வகையில், களவுப் பகுதியில் உளத் தத்துவ நிகழ்ச்சியினை விளக்கும் அன்பையும் அறிவையும் அமைதியையும் தக்கவாறு உயிர்ப்புறு முறையில் விளைத்தற்குரிய களவொழுக்கத்தையும் அதன் மூகத்தால் எய்தலுறும் கடவுள் கற்பு வாழ்க்கையும் எவ்வாறு இறைவனடியினை அணைதற்குரிய அருமையுடைத்தென்பதைப் புலப்படுத்தி வீட்டின்பப் பேற்று நிலையினை நிறுவியுள்ளார். காமத்துப்பாலின் களவியற்குரிய கிளவிகள் யாவும் இறைக் காட்சியில் திளைத்தும் பழகும் முறையினையும், கற்பியற்கண் அக்காட்சியின் பயனை நுகர்ந்து கொண்டு அரனடிகூடி அனுபவிக்கும் வீட்டின்ப ஞான வுணர்வினையும், மெய்ப்பாவலர், எப்பாலவரும் போற்றுதற்குரிய அழகாகிய கருத்து நுட்பங்களோடு விளக்கும் இனிமையும் இன்பமும் என்னே! என்னே!

— தொடரும்

கருந்திட்டைக்குடியின் கல்வெட்டுச் சிறப்பு

கோ. கார்த்திகேயனி,
எம்.ஏ பி, எசு சி., புலவர், டிப்-இன்-அக்ரி, செர்ட். இன் எபி.
அண்ணாமலைப் பல்கலைக் கழகம்.

தோற்றுவாய்!

தஞ்சையின் வடதிசையில் உள்ள நகரப்பகுதி கருந்திட்டைக் குடி என்றழைக்கப்படுகின்றது. இக் கருந்திட்டைக்குடியான கரந்தை வெண்ணாற்றிற்குத் தெற்கிலும், வடவாற்றிற்கு வடக்கிலும் இரு ஆறுகளுக்குமிடையே அமைந்த வளமான பகுதியாகும் தஞ்சைக்கு எவ்வளவு பழமை உண்டோ அதனைவிட அதிகப் பழமை இக்கருந்திட்டைக் குடிக்கு உண்டு.

தஞ்சைப் புறம்படி :

இக் கருந்திட்டைக்குடியினை சோழர் கல்வெட்டுக்கள் "தஞ்சாவூர்ப் புறம்படியான கருந்திட்டைக்குடி" எனக் குறிப்பிடுகின்றன. புறம்படியாவது தலை நகரின் ஒரு கூறுகக் கோட்டைக்கு வெளியில்—கோட்டையினுள் உள்ள நகர்ப் பகுதிக்கான உணவு தொழில், போன்றவற்றிற்கு அடிப்படையானதாக, அரசியலில் அடிப்படை ஊழியம் செய்வோரும், மக்களும் இழிசினருமாக உறைந்து வந்த நிலப்பரப்பேயாகும்.

வசிஷ்டேஸ்வரர் கோயில் :

இத்தஞ்சாவூர்ப் புறம்படியாம் கருந்திட்டைக்குடியின் மையப் பகுதியில் இப்புறம்படியின் வரலாற்றுச். சிறப்பிற்குரிய "கருணாசாமி கோயில்" எனப்படும் வசிஷ்டேஸ்வரர் கோயில் அமைந்துள்ளது. இதனை "நித்த விநோத வளநாட்டுத் தஞ்சாவூர்க் கூற்றத்து... வடவாற்றின் வடகரை கருந்திட்டைக்குடி தேவர்க்கு" எனும் கல்வெட்டுப் பகுதி விளக்கும். இக் கோயிலின் கருவறைச் சுவர்களில் மிகச் சிறந்த சிற்பங்கள் அமைக்கப்பட்டிருத்தலோடு சோழர் வரலாற்றின் சிறப்புடைய கல்வெட்டுக்களும் பொறிக்கப்பட்டுள்ளன.

கல்வெட்டுக்களும் — அரசர்களும் :

கல்வெட்டுக்கள் ஒரே அரசர் காலத்தினைச் சார்ந்தவையல்ல அவை நான்கு சோழ அரசர் காலத்தனவாக உள்ளன.

இரண்டாம் பராந்தகனுகிய சுந்தர சோழனுக்குரியதாயும், முதல் இராச ராச சோழனுக்குரியதாகவும், முதல் இராசேந்திர சோழனுக்குரியதாயும் இரண்டாம் இராஜாதி ராஜ தேவர்க்குரியதாயும் நான்கு கல்வெட்டுக்கள் உள்ளன

கரந்தையின் பழமை :

சுந்தர சோழன் இராச ராசனின் தந்தையாவான் இவனது கல்வெட்டு இக்கோயிலில் பொறிக்கப்பட்டுள்ளமையால் இக் "கருணுசாமி கோயில்" இராசராசனுல் எழுப்பிக்கப்பெற்ற தஞ்சைப் பெருங் கோயிலிலும் பழமை மிக்கது என்பது அறியத்தக்கதாம்.

சுந்தர சோழன் இக்கோயிலுக்குச் செய்த திருப்பணிகளையே இக்கல்வெட்டு குறித்து நிற்பதால் சுந்தர சோழன் காலத்தில் இக்கோயில் பழுதடைந்து, சீர்கேடுற்று அழிவுற்ற நிலையில் திருப்பணி செய்ய வேண்டிய நிலையில் இருந்தமை அறிய முடிகிறது. எனவே சுந்தர சோழன் காலத்திற்கு மிக முந்தியதாக, இக்கோயில் எழுப்பப் பெற்றிருத்தல் வேண்டும்.

முத்தரையர் காலத்தது :

சுந்தர சோழனின் காலம் 10- ஆம் நூற்றுண்டாகும். ஒரு கோயில் பழுதடையக் குறைந்தது ஒரு நூற்றுண்டுப் பழமையாவது இருத்தல் வேண்டும் எனவே இக் கோயிலை ஒன்பதாம் நூற்றுண்டைச் சார்ந்ததாகக் கொள்ளலாம் ஒன்பதாம் நூற்றுண்டிற்கும் முந்தியதா இக்கோயில்? என்பது குறித்து ஆய்வு செய்கின்ற போழ்து இக்கோயில் கி பி ஏழாம் நூற்றுண்டைச் சார்ந்தது என்பதற்கான சான்றுக, திருநாவுக்கரசரின்

" நற்குடிமேல் விடையுயர்ந்த நம்பன் செம்பங்
குடிநல்லக் குடிநளிநாட்டியத்தான் குடி
கற்குடிதென் களக்குடிசெங் காட்டங் குடி
கருந்திட்டைக் குடி கடையர் குடி காணுங்கால்
விற்குடிவேள் விக்குடிநல் வேட்டக் குடி வேதிகுடி
மாணிகுழ, விடைவாய்க்குடி
புற்குடிமா குடிதேவன் குடிநீலக் குடி புதுக்குடியும்
போற்றவிடம் போகுமன்றே"

(அடைவு திருத்தாண்டகம் — 3 பாடல்)

தாண்டகப் பாடல் விளங்குகின்றது, ஏழாம் நூற்றுண்டில் வாழ்ந்த அப்பரடிகள் இக்கருந்திட்டைக்குடி நாயனர் கோயிலை

வைப்புத் தலமாக வைத்துப் பாராட்டிப் பாடல் புனைய வேண்டு மெனில் இக்கோயிலின் புகழ் யாண்டும் பரவியிருந்திருக்க வேண்டும் என்பது தேற்றம். இவ்வாறு புகழ் பரவுதற்கும் இதன் புகழினை அடிகளுக்குணர்த்தக் கூடிய நிலைக்கும், இதன் பழமையே காரணமாயிற்றெனலாம்

கி. பி. ஆறு, ஏழு நூற்றுண்டுகளே முத்தரையர் தஞ்சை யினை ஆண்டு வந்த காலம், எனவே இக்கோயில் கி. பி. ஆறு, ஏழாம் நூற்றுண்டுகளில் முத்தரையர் காலத்தில் எழுப்பிக்கப் பெற்றிருக்க வேண்டும் என்று கொள்வதே பொருத்தமுடைய தாகும். முத்தரையர் காலக் கட்டிடக்கலை செந்தலையில் காணப் படுவது போன்றே ஈண்டும் காணப்படுகிறது ஆனால் இக் கோயில் கி. பி. 9 ஆம் நூற்றுண்டளவில் காலப்பழமையால் மிகவும் சிதலமடைந்திருக்கின்றது எனவே பிற்காலச் சோழர் காலத்தில் ஒவ்வொரு பாகங்களாகத் திருப்பணி செய்யப்பட்டி ருக்கிறது. இதனை, கீழ்க்காணும் சான்றுகளால் காணலாம்.

திருப்பணிகள் :

கோப்பரகேசரிபன்மர் என்று அழைக்கப்படும் சுந்தரசோழ னாகிய இரண்டாம் பராந்தகனின் பத்தாவது ஆட்சியாண்டில் "வெள்ளாட்டி அருணிமலைப் பிராட்டி" என்பாள் இரு துவார பாலகர்களையும் எழுந்தருளிவித்தாள் என்ற செய்தியினை "ஸ்வஸ்தி ஸ்ரீ கோப்பரகேசரி பன்மற்கு யாண்டு பத்தாவது இத்துவாரபாலகர் இருவரையும் செய்வித்து எழுந்தருளிவிச் சாள் செம்போர்க் கோட்டத்துப் பட்டிநாட்டுப் பழம்பட்டினத்து இருக்கும் வெள்ளாட்டி அருணிமலைப் பிராட்டி" 1414 (A R. No 51 of 1897) எனும் கல்வெட்டுப் பகுதி புலப்படுத்துகின்றது.

இதே காலத்தில் இரண்டாம் பராந்தகனின் பெரியப்பன் பிள்ளையும் கண்டராதித்தன் - செம்பியன் மாதேவி இவர்களின் மகன் என்று கூறப்படுகின்றவனும். இரண்டாம் பராந்தகனின் மூத்த மகன் ஆதித்த கரிகாலன் இறந்த பிறகு சுமார் பதினைந்து ஆண்டுகள் சோழ மன்னனாக அரசாட்சி செய்தவனுமாகிய மதுராந்தகன் என்னும் உத்தம சோழன் இக்கோயிலுக்கு நெய் யட்டுதற்காக ஆடுகள் கொடையாகக் கொடுத்தமையினை "ஸ்வஸ்தி ஸ்ரீ கோப்பரகேசரி பன்மற்கு யாண்டு பத்தாவது தஞ்சாவூர்க் கூற்றத்துத் தஞ்சாவூர்ப் புறம்படிக் கருந்திட்டைக் குடி மகாதேவர்க்கு மதுராந்தகன் கண்டருதித்தன் வைத்த ஆடு தொண்ணூற்றும் கொண்டு நெய்யட்டக் கடவ மனருடி", (A R No. 42 of 1897) எனுங் கல்வெட்டு எடுத்தியம்புகின்றது

இக்கோயில் முதல் இராசராசனின் இருபத்து நான்காவது ஆட்சியாண்டில் மீண்டும் முழுமையாக திருப்பணி செய்யப் பெற்றிருக்கின்றது. இராசராசனின் குதிரைப்படை வீரர்கள், அவர்தம் குடும்பத்தாரின் சைவத் தொண்டுள்ளத்தால் இக் கோயில் திருப்பணி செய்யப்பட்டதென்பதனை,

"........ .... ஸ்ரீ கோவி ராஜ ராஜ கேசரி பன்மரான ஸ்ரீ ராஜராஜ தேவர்க்கு யாண்டு இருபத்து நான்காவது ஸ்ரீ ராஜராஜ தேவர் சிறுதனத்து சிறுகளான்தரண் தரிஞ்ச குதிரைச் சேவகத்தில் அரங்கன் காரியான சோழவிச்சாதிர முத்தரையனெடு, இளைய படை இருமுடி சோழ வீரரில் காரி குளிர் வாகை ஸ்ரீ ராஜராஜ தேவர் காண வில்லெக்கத்தொளம் எய்து காரி குளிர் வாகை பட்டமையில் இவனுக்குறவு முறை கடவரான காரி நக்கத்தின் மகன் கண்டன் காரியும், காரி கொற்றத்தின் மகள் கண்டன பொற்காரியும், இவள் கொழுந் தன் குட்டி பொன்னுடையும் உள்ளிட்டாரொடும், திருத்தி இந்த ஸ்ரீ கோயில் மகாதேவர்க்கு வைத்த நொந்தா விளக்கு சந்த ராதித்தவர எரிக்க கடவாரித்தளியில் ஸ்ரீ கோயிலுடையார்கள்" என்னும் செய்திகளை உடைய இக்கோயிலின் மேற்புறக் கரு வறைச் சுவரில் காணப்படும் கல்வெட்டு புலப்படுத்துகின்றது.

இக்கோயில் அமைந்துள்ள பகுதியில் உள்ள குதிரைக் கட்டித்தெரு, லாயம் போன்ற தெருப் பெயர்களும், இங்கு இராச ராசசோழன் காலத்தில், குதிரைப்படை வீரர்கள் வாழ்ந்து வந்த பழமையினை வலியுறுத்துகின்றன.

முதல் இராசராசனின் அருள் நோக்கிற்கு இலக்காகிய இக் கோயில் திருப்பணி பெற்ற நிலையில், இராசராசனின் தமக்கை யார் குந்தவையார் பல நிவந்தங்களும் செய்திருக்கின்றார்.

இக்கருந்திட்டைக்குடி மகாதேவர்க்குக் குந்தவையார் நொந்தா விளக்கு வைப்பதற்கு குறிப்பிட்ட நிலத்தினை விற்று எண்பத்து ஒன்றரையே மூன்றுமா அரைக்காணி வாசிபடாக் காசுகளையும் கொடுத்தமையினைக் (1409 A R No 46 of 1897) கல்வெட்டுணர்த்துகிறது.

முதல் இராசேந்திர சோழனின் மூன்றாவது ஆட்சியாண் டிலும் இக்கோயில் மகாதேவர்க்கு அமுது படைக்க நிலம் வாங் கப்பட்டிருக்கின்றது. இதனை No. 1407 (A. R. No. 44 of 1897)

கல்வெட்டும் No. 1408-ம் தெரிவிக்கின்றன. இப்படி முத்தரையர் காலத்தில் சிறு கோயிலாகக் கட்டப்பட்டிருந்த இவ்வாறும் நூற்றுண்டுக் கோயில் கி. பி. ஒன்பதாம் நூற்றுண்டில் பழுதடைந்து குலைந்த நிலையில் பொதுமக்களே ஒவ்வொரு பகுதியாகத் திருப்பணி செய்ய கி. பி பத்து. பதினொன்றும் நூற்றுண்டுகளில் வாழ்ந்த சுந்தர சோழன், மதுராந்தகன், இராசராசன், இராசேந்திரன், குந்தவையார் முதலியோரால் இக்கோயிலுக்கு வேண்டிய நிலங்களும், நொந்தா விளக்கும், அவ் விளக்கெரிப்ப ஆடுகளும் பரிசளிக்கப்பட்ட நிலையில் செம்மையுற்றுப் பிற்கால 15, 16 ஆம் நூற்றுண்டு அடியார்களால் மண்டபங்களும் கட்டப்பெற்ற நிலையில் ஒரு சிறந்த கோயிலாக இன்று விளங்கி வருகின்றது.

கல்வெட்டுச் சிறப்பு:

இக்கோயிலின் கருவறைச் சுவர்களின் மீது பொறிக்கப் பட்டுள்ள கல்வெட்டுக்கள் மிகச் சிறந்தனவாகும். பொருள் காட்டும் நிலையிலும். எழுத்தமைப்பு நிலையிலும் விழுமியன வாகும்.

—... நான்கு சோழ அரசர்களுக்கு உரியனவாக இருப்பி னும், இராசராசனின் கல்வெட்டுக்களில் காணப்படும் எழுத் துக்கள் வியக்கத்தக்க அழகும் அமைப்புமுடையனவாகத் திகழ் கின்றன.

இவ்விராசராச சோழனின் 17-ஆவது ஆட்சியாண்டுக் கல்வெட்டு, 24-ஆவது ஆட்சியாண்டுக் கல்வெட்டு ஆகியவற் றில் கூட்டெழுத்துக்கள் சிறப்பானமுறையில் காணப்படுகின்றன 'ந்த' 'ர்த்தா' 'க்க' வா, 'க்கு' 'ந்தி' ய, ச, னூ, இ, டி, ங், ந, ரு, ஸ்ரீ போன்ற எழுத்துக்களும் வேறெங்கு மில்லாத அழகிய வடிவில் காணப்படுகின்றன. எழுத்துப் புணர்ச்சி நிலையும், தொடர்ப்புணர்ச்சி நிலையும் விழுமிய நிலையிலுள்ளன.

"இவனுக் குறவு முறை" "வேங்கை நாடுங் கங்கை பாடியும்" "கலிங்கமுணொண்டிசை" "ஏழரை இலக்க முந்திண்டிறல் வென்றி" போன்ற சான்றுகள் இதனை விளக்குகின்றன.

கோவிராஜராஜ கேசரி எனும் புதுமை:—

மேலும் இக்கல்வெட்டுக்கள் ஒரு புதிய கருத்தினையும் தெரிவிக்கின்றன. இதுகாறும் இராசராசனின் பட்டப்பெயர் 'இராஜ கேசரி' என்பதாகவே கண்டிருக்கின்றோம். ஆனால் கருந்திட்டைக்குடி கல்வெட்டுக்களோ இவனது பட்டப்பெயரை "இராஜ ராஜ கேசரி பன்மர்" எனவே குறிப்பது சிந்தனைக்குரியதாகும். இராசராசனின் ஏனைய கல்வெட்டுக்களெல்லாம் அவனை இராஜ கேசரி எனக் குறிக்கையில் இக்கரந்தைக் கல்வெட்டுக்கள் மட்டும் ஏன் இராசராச கேசரி எனக் குறிப்பிட வேண்டுமெனில்: இக் கல்வெட்டுக்கள் இராசராசனின் பெருவெற்றிகள் முடிவுற்று. சோழ அரசியல் அமைதியாக நடந்த காலத்தில் அவனிடம் பணியாற்றிய பொது மக்களால் படைக்கப்பட்டவையாகும். இராசராசனின் பெருமையினையும், பேராட்சிச் சிறப்பினையும், பெருங்குணங்களையும் நேரிற்கண்டு துய்த்தவர்களாதலின் அவனை ' இராஜ ராஜ கேசரி" எனச் சிறப்பித்துள்ளனர் எனக் கொள்வதே ஏற்புடையதாகும்.

இங்குள்ள பிறிதோர் இராசராசனின் கல்வெட்டு அவனை "திருபுவனச் சக்கரவர்த்திகள் ஸ்ரீ ராஜ ராஜ தேவர்" (A. R. No 47 of 1897) எனக் குறிக்கின்றது.

புதுக் கல்வெட்டும் புதிய செய்தியும்:

இங்குள்ள சுந்தர சோழன், இராசராசன், இராசேந்திரன் ஆகியோருடைய கல்வெட்டுக்கள் பெரும்பாலும் இக்கோயில் இறைவர்க்குச் செய்யப்பட்ட நிவந்த, வழிபாடுகளையே புகலுகின்றன ஆனால் இரண்டாம் இராசாதிராசனின் கல்வெட்டு ஒன்று ஒரு புதிய செய்தியைப் புலப்படுத்துகின்றது

இவ்விராசாதிராசனின் இக்கல்வெட்டு இதுகாறும் கண்டு பிடிக்கப்படாத, வெளிவராத புதிய கல்வெட்டாகும் இக்கல் வெட்டில் காணப்படும் செய்தி கி பி 1163—1178 வரை உள்ள சோழர் வரலாற்றின் தெளிவு நிலைக்கு ஒரு விளக்கக குறிப்புத் தரும் தனமையதாகவும் உள்ளது.

தஞ்சையின் புறம்படி நகரத்தார் தங்கள் அரசியும், இரண்டாம் இராசாதிராசனின் பட்டத்தரசியுமான முச்கோக் கிழானடிகளின் ஆணை கொண்டு பகிர்ந்து கொண்ட நிலத்தினைப் பற்றிய விளக்கததினைத் தரும், அக் கல்வெட்டினைக் கீழ்க்காண்க:

"ஸ்வஸ்தி ஸ்ரீ கடல்சூழ்ந்த பார்மாதரும்
பூமாதரும் கலைமாதரும் அடல்சூழ்ந்த போர்மாதரும்
சிரிமாதரும் அமர்ந்தேத்தொழ நாற்கடல்சூழ்
புவியேழும் பாற்கடல் போற் புகழ் பரப்ப
ஆதியுகமாயெண்ணிச் சோதிமுடி புனைந்தருளி
அங்க முமைம்பூதமும் நெறிநின்று பாலிப்ப
தென்னவரும் சேரலரும் சிங்களரு முதலாய
மன்னவர்கள் திறைசுமந்துவர
திண்டிசை ஊழியூழியொரு
செங்கோலெழு பாருமினி தளிப்பச் செம்பொன்
வீர சிம்மாசனத்து உலகுடை
முக்கோக் கிழானடிகளுடன் வீற்றிருந்தருளிய
கோவிராச கேசரி பன்மரான சக்கரவர்த்திகள்
ஸ்ரீ ராஜாதிராஜதேவர்க்கு யாண்டு எ ஆவது

பாண்டிய குலாசனி வளநாட்டுத் தஞ்சாவூர் கூற்றத்துத் தஞ்சாவூர் நகரத்தோம் ஐம்பதின்கரை காணியுடைய குடிமக்கள் எல்லோருங் க ...... இசைத்து சம்மதித்தபடி எங்கள் காணி கருந்திட்டைக்குடியான சுங்கந் தவிர்த்த சோழ நல்லூர் முன் பிலாண்டுகள் தலைநிலக்கடை நிலம் ஒக்கக் கூறிட்டு அநுபவி யாமையால் ஏழாவது தலைநிலக்கடை நிலம் ஒக்கக் கூறிட்டு கரை எடுத்தோம் இது சந்திராதித்தவரை செல்வதாக திருவாணை உலகுடை முக்கோக்கிழான்டிகள் ஆணையிட்டு இப்படிக் கல்லில் வெட்டிக் கொண்டேம் இந்நகரத்தேம் "

கல்வெட்டின் இன்றியமையாத கருத்துக்களில் தலைமை பெறுவது இராசாதிராசனின் பட்டத்தரசி ஆணையிட்டு அரசு செய்வதாகும் அரசியின் ஆணையும் அரசனின் ஆணை போன்றே கருதப்பட்டுக் கல்லில் வெட்டவும், ஆணை வழி நடக்கவும் கூடிய தாக விளங்குதல் காண்க,

அடுத்து வரலாற்றுக்கால அமைப்பில் மிகச் சிறந்த கருத்தினைக் காட்டும் பகுதி. இக்கல்வெட்டு இரண்டாம் இராசாதிராசனின் ஏழாவது ஆட்சியாண்டில் வெட்டப்பட்டதாகும் கி பி 1163 இல் இரண்டாம் இராசராசனின இறுதிக் காலத்தில், அவனால் இரண்டு வயதில் இளவரசுப் பட்டம் சூட்டப்பெற்று

1166 இல் பெருமானம்பிப் பல்லவராயரால் 4 வயது நிரம்பப் பெற்ற நிலையில் சோழ அரியணை ஏறிய இரண்டாம் இராசாதி ராசனின் ஆட்சியாண்டின் ஏழாவது ஆட்சியாண்டில் இக்கல் வெட்டு வெட்டப்பட்டிருக்கிறது. எனவே இக்கல்வெட்டு வெட் டப்பட்டபோது இராசாதிராசனின் வயது 11 ஆக இருத்தல் வேண்டும் (பல்லவராயன் பேட்டைக் கல்வெட்டுத்தரும் வர லாறு, தமிழ்ப் பொழிலில் காண்க)

பதினொரு வயதினனான இராசாதிராசனின் மனைவியாகிய முக்கோக்கிழானடிகள் தாம் அவனது ஏழாவது ஆட்சியாண்டில் இக்கல்வெட்டிற்கான ஆணை பிறப்பித்திருக்கின்றாள் அப்படி யாயின் சிறுமியாகவன்றோ அவளிருந்திருக்க இயலும்? எனுந் தடை எழுமேல் தம்மிலும் வயதில் மூத்தவளையும், தமிழ் மன் னர்கள் மணம் புரிந்துள்ள பொதுச் செய்தி கொண்டும் சிறுமி யாயினும் அரசியாகத் திகழ்தலையும் கண்டு தெளிக.

ஐம்பதின்மேல்நகரம் என்று தற்போது அழைக்கப்படுவதும் திருப்பூந்துருத்திக் கண்மையிலுள்ளதுமான ஐம்பதின் கரை யினைச் சார்ந்த மக்களுக்குத் தஞ்சைப் புறம்படியான கருந்திட் டைக்குடி சுங்கந் தவிர்த்த சோழ நல்லூரைச் சார்ந்த 7 வேலி நிலம் இரண்டாம் இராசராசனாலோ அன்றி இராசாதிராச னாலோ முன்னர் இறையிலியாகக் கொடுக்கப்பட்டிருக்கின்றது ஆனால் அவர்கள் அந்நிலத்தினைத் தாங்கள் அநுபவிக்காமல் வெறுமையாகப் பல்லாண்டுகள் விட்டிருக்க, அப்பயன்படுத்தப் படாத நிலத்தினைத் தஞ்சை நகரத்தார் தங்களுக்குள் ஒக்கக் கூறிட்டுக் கரை எடுத்துப் பயன்படுத்தப் பட்டத்தரசியின் ஆணை பெற்று அந்நிலத்தினைத் தங்கள் ஆளுகைக்குக் கொண்டு வந்துள்ள செய்தி அக்கால அரசியல சூழலைத் தெற்றெனப் புலப்படுத்துகின்றன

இறையிலி நிலங்கள் பயன்படுத்தப்படாத நிலையில் வேற் றாக்குப் பங்கீடு செய்யப்படக்கூடிய ஒரு அரசியல் அமைப்பு சிறப்புடைய ஒன்றாகும் இவ்வாறு பட்டத்தரசி ஆணையிட்ட கல்வெட்டாயும், அக்கால அரசியல் நிர்வாகத்தினையும் தெற் றென விளக்கக் கூடிய இக்கல்வெட்டு இரண்டாம் இராசராச னின வரலாறு அறிதற்கான கல்வெட்டாயும் ஆய்விலக்கிற்கு உரியதாக விளங்குகின்றது.

சிற்பச் சிறப்பு :

மேலும் இக்கோயிலுள் காணப்படும் சிற்பங்களும் மிகச் சிறந்த சிற்பங்களாக விளங்குகின்றன. தெற்குக் கருவறைச் சுவரில் காணப்படும் கங்காதர மூர்த்தி மிக அழகிய ஒரு சிற்பமாகும். அணிந்துள்ள புலித்தோலாடை கூட புலித் தோல் போன்றே பொறிக்கப் பெற்ற நிலையிலுள்ளது. இலிங்கோத்பவர் சிற்பத்தில் பூ வேலைப்பாடுகள் காணப்படுகின்றன. இங்குள்ள "அர்த்தநாரீஸ்வரர்" சிற்பம் சிறப்பானது. இச்சிற்பத்தின் 'வலது' பகுதியில் பார்வதியின் உடற்கூறு காணப்படுவது வியப்பிற்குரியதாகும்

நிறைவுரை !

பழமை மிக்கதும் தஞ்சைப் பெருங்கோயிலுக்கு நான்கு நூற்றாண்டுகள் முந்தியதும், சோழப் பேரரசர்களின் திருப்பணிக்கு இலக்காகியதும், முத்தரையர்கள் காலத்ததாகவும், அப்பரடிகளால் வைப்புத் தலமாகவும், பாராட்டப் பெற்ற பெருமை மிக்கது இக்கருந்திட்டைக்குடி வசிஷ்டேஸ்வரர் கோயிலாகும். இக்கோயிலில் காணப்படும் கல்வெட்டுக்களும், கல்வெட்டின் எழுத்துக்களும் ஏனைய தமிழ்க் கல்லெழுத்துக்களினின்றும் சற்றே வேறுபட்டதாகவும், அழகியதாகவும், பொருளாழம் மிக்குடையதாகவும், வரலாற்று ஆய்விற்குரியதாயும் விளங்குகிறது இக்கல்வெட்டுகளைப் பற்றிய ஆய்வு சோழர் கால அரசியல் சூழலை ஓரளவு புதிதாக விளக்கப் படுத்துவனவாயுமுள்ளது அறியத்தக்கதாகும்.

தமிழக நெஞ்சத்தில்.........

கோ தேவ்.

மன்னுதமிழ்ப் பெருநிலத்தின் அமைச்ச ராகி
மாண்புடனே அரசோச்ச மக்களெல்லாம்
தன்னினிய சொல்லாலே அண்ணு வென்று
தரமுடனே அழைத்திட்டார்! தரணி போற்றும்
தென்னகத்தின் தென்றலென எளிய சொல்லால்
தெவிட்டாத பேருரைகள் பேசி நன்றே
பன்னமைமாம் தமிழகத்தின் மக்கள் நெஞ்சில்
பாங்குடனே வாழ்கின்ருர் அண்ணு மற்றும்,

காராரும் சோலேமலி தமிழ கத்தின்
கலேகளிலே நாடகத்தில் புதுமை தோன்றப்
பாராரும் மேனுட்டின் நயங்கள் தன்னேப்
பாங்குடனே காட்டிதமிழ் வளர்த்து நாட்டில்
சீராரும் புதுமைக்கோர் தலேவ ஞகிச்
சிறப்புடனே வாழ்ந்திட்ட அறிஞ ராகி
நேராரும் செயலுக்கோர் எல்லே யாகி
நிற்கின்ருர் நெஞ்சமதில் அண்ணு என்றும்.

திருத்தியநற் சொல்லதனுல் மக்கள் தம்மைத்
திராவிடத்தின் உண்மைநிலே உணரச் செய்தே
பொருந்தியநம் தமிழ்மொழியின் புகழை நாட்டில்
புதுமைபெறு கற்பனேயால் புனேந்து காட்டி
விருந்தெனவே மக்களுளம் விரும்பி ஏற்கும்
விதமான சொல்லழகால் விளக்கி வாழ்ந்த
பெருந்திருவாம் நம்அண்ணு மக்கள் நெஞ்சில்
பிரியாமல் வாழ்கின்ருர் என்றும் நன்றே!

களங்கமிலாத் தொண்டதனுல் அமைச்ச ராகிக்
கருத்துடனே தமிழகத்தை உயர்த்த வேண்டி
வளங்கள்பல உயர்ந்திடவே திட்டம் தீட்டி
வரலாற்றில் இடம்பெற்று வாழ்ந்த தோடு
இளமைபெறு வாலிபர்தம் ஏற்றங் கண்டு
ஏற்புடனே உயர்ந்திடவே எல்லாம் செய்து
நிலேயாமை தனேயுணர்த்தித் தமிழ கத்தின்
நெஞ்சத்தில் நிலவிடுநம் அண்ணு வாழ்க!

புரட்சிக் கவிஞரின்
ஏற்றப் பாட்டு

இராம. சுப்பிரமணியன், M. A., B. L., B. Lib Sc., சென்னை.

கவிஞரின் ஏற்றப் பாட்டு எளிமையும், இனிமையும் செறிவும் நிறைந்து ஈடும் எடுப்புமின்றித் திகழ்கின்றது. இப்பாட்டினைப் பாடும்போது ஏற்றம் இறைப்பது போன்ற காட்சி நம் மனக்கண் முன் விரிந்து காணுகின்ற உணர்வினைப் பெறுகின்றோம். இனிய ஓசைப் பொருத்தத்துடன் துள்ளுகிறது. குறள் போன்ற குறுகிய அடிகளிலே எத்தனை காட்சிகள்; கருத்துக்கள் எத்தனை !

'ஏற்றப் பாட்டு' என்ற கவிஞரின் இந் நூல் 1949 ஆம் ஆண்டு புதுச்சேரி பாரதிதாசன் பதிப்பகம் வாயிலாக வெளியிடப் பெற்றது.

ஏற்றப் பாட்டில் இருநூறு சால்களுக்கு இருநூறு அடிகள் அமைத்திருக்கிறேன். அவற்றில் காலை நூறு சால்களுக்கு நூறு. பிற்பகல் நூறு சால்களுக்கு நூறு.

காலையில், கதிர் தோன்றுவது முதல் அது உச்சியை அடையும் வரை நூறு சால்கள் இறைத்தல் போதுமா எனில் போதாது தான். இத்தனை சால்கள் இறைக்க வேண்டும் என்பது ஆங்காங்குள்ள பெரு நில முடையார்க்கும் ஏற்றம் இறைக்கும் தொழிலாளிகட்கும் ஏற்படும் நடுநிலைத் திட்டத்தைப் பொறுத்ததாகும்.

நூறு சால்கட்கு மட்டும் நூறடி எழுதினமைக்குக் காரணம் என்ன?

நூறு அடிகளைத் திருப்பிக் கொள்ளலாம். அவ்வாறு திருப்பிப் பாடும்போது, காலைப் பதினொரு மணிக்குத் திருப்புகையில் கதிர் தோன்றுவதைச் சொல்லுகின்ற விடியற்கால 'அடி' சரியாய் இராதே எனில் – நேரப் பொருத்தமிராத அடிகளை நீக்கிச் சால்களின் தொகையில் கழித்துக் கொள்ளும் திறமை இறைப்பார்க்கு உண்டு. இதுபோலவே மாலையிலும் என்க.

விளக்கு வைக்கும் வரைக்கும் ஏற்றம் இறைப்பதாய் ஆசிரியர் எழுதியிருக்கிறார், அது மட்டுமன்று இராக் காலத்திலும் இறைக்க நேரலாம். அப்போதெல்லாம் இறைப்பவர், காலத்தை

— நேரத்தைக் குறிக்கும் அடிகளை நீக்கிப் பொதுவான கருத்துள்ள அடிகளைப் பாடிக் கொள்ள வேண்டும்.

எங்கணும் — துறைதோறும் நம் கலை, நம் ஒழுக்கம் பயில வேண்டும். நம் நிலை நினைக்கப்படவேண்டும் இலேசில் இல்லை நம் முழு விடுதலை.

'ஏற்றப் பாட்டு' பின்னர் 1955ஆம் ஆண்டில் பதிப்பிக்கப் பட்ட பாரதிதாசன் கவிதைகள் — மூன்றாந் தொகுதியில் இணைக்கப்பட்டது. [1]

முற்பகல்

முற்பகல் பாடல். முதல் பாடல் கதிரவன் வாழ்த்துடன் தொடங்குகின்றது.

ஓங்கு கதிர் வா வா — நீ
[ஒன் றுடனே] வாழி
மாங் கனியும் நீதான் — அந்த
வானம் என்னும தோப்பில்?
நீங்கும் பனி என்றே — இங்கு
நீ சிரித்து வந்தாய்! [2]

கதிரவனின் வரவு கண்டு வெறும் புல்நுனிப் பனி மட்டும் தானா நீங்கும்? உலக உயிர்களின் பனி (துன்பம்) அனைத்தும் நீங்குகின்றதல்லவா, ஆகவே அவன் சிரிக்கின்றான்!

திராவிட நாட்டு வாழ்த்து

அடுத்து திராவிட நாட்டு வாழ்த்து. இத் திராவிட நாடு இன்பம் உள்ள நாடு.

இன்பம் உள்ள நாடு — தம்பி
இத் திராவி டந்தான் [3]

திராவிட நாட்டின் சிறப்பு

திராவிட நாட்டின் சிறப்பினை முப்பத்து நான்கு சால்களில் கூறுகின்றார் கவிஞர். [4] பூ விரியும் சோலை, நல்ல பொன்

---

1. பாரதிதாசன் கவிதைகள் — மூன்றாந் தொகுதி, பதி - 2, பாரி நிலையம், சென்னை, 1961 — பக். 145 — 163
2. மே. கா. நூ. பக். 147
3. மே. கா. நூ. பக். 147
4. மே. கா. நூ. பக். 148 — 150

கொழிக்கும் நன்செய் அனைத்தும் காவிரி வைகையின் கருணையினால் இங்கு உண்டு.

காவிரி நல் வைகை — பல
கண் கவரும் பொய்கை
பூ விரியும் சோலை — நல்ல
பொன் கொழிக்கும் நன்செய் [5]

திராவிடர் கலை ஒழுக்கம்

திராவிடர் கலை ஒழுக்கம் பற்றி 56 சால்களில் கவிஞர் கூறுகின்றார். வாழ்க்கைக்குப் பகுத்தறிவு இன்றியமையாதது — வாழ்க்கை என்னும் இரயில் வண்டியின் ஓட்டத்துக்கு — பகுத்தறிவு என்னும் பச்சை விளக்கு தேவை.

பச்சை விளக் காகும் — உன்
பகுத் தறிவு தம்பி.
பச்சை விளக் காலே — நல்ல
பாதை பிடி தம்பி. [6]

வாழ்க்கைக்கு வழிகாட்டி திருக்குறள் என்பதைக் கவிஞர்,

வள்ளு வரின் நூலே — நல்ல
வழி யளிக்கும் தம்பி [7]

என்று குறிப்பிடுகின்றார்.

தெய்வம் ஒன்று உண்டு என்பதைக் கவிஞர் வற்புறுத்திக் கூறுகின்றார், அதற்கு உருவம் இல்லை,

ஓர் கடவுள் உண்டு — தம்பி
உண்மை கண்ட நாட்டில்
உள்ள தொரு தெய்வம் — அதற்கு
குருவ மில்லை தம்பி. [8]

கவிஞருக்கு ஆணுக்கு ஒரு நீதி; பெண்ணுக்கு ஒரு நீதி என்பது இல்லை; நீதி அனைவருக்கும் பொது என்பதை வற்புறுத்திக் கூறுகின்றார்

5. மே. கா. நூ. பக் 150
6. மே. கா. நூ. பக். 153
7. மே. கா. நூ பக். 153
8 மே. கா நூ. பக். 151

நீதி பொது தம்பி — இந்த
நீணி லத்தில் யார்க்கும்.
மாத ருக்கும் நீதி — ஆண்
மக்க ளுக்கும் ஒன்றே. [9]

பிற்பகல்

மாலையில் கதிரவன் தன் ஆட்சியினை மெல்ல நீக்கி. குடை சாய்ந்தான். மாலை வெய்யிலை இந்த வையம் வரவேற்கின்றது.

உச்சிக் குடை சாய்ந்தான் — கதிர்
[ஒன்று டனே] வாழி! [10]

ஒழுக்கம்

பெண்ணுக்கு நல் ஒழுக்கம், கல்வி, பொறுமை, இன்சொல், இன்னா செய்யாமை முதலியன இன்றியமையாத பண்புகளாகும். அதனைத் தான் திருவள்ளுவர்

அன்பும் அறனும் உடைத்தாயின் இல்வாழ்க்கை
பண்பும் பயனும் அது. [11]

என்று குறிப்பிடுகின்றார்.

அதனைக் கவிஞர், பல்முறை பல்வேறு வகையாலும் வற் புறுத்திக் கூறுகின்றார்.

நல் லொழுக்கம் ஒன்றே — பெண்ணே
நல்ல நிலை சேர்க்கும்
இல் லறமே பெண்ணே — இங்கு
நல் லறமென் பார்கள்
இன்சொல் இனி தாகும் — பெண்ணே
இன்னல் செய்ய வேண்டாம். [12]

தனித்து வரும் பொழுது, மடக்கினால், முதலில் எடுத்துக் கூறு; கேட்கவில்லையெனில் தாக்கு! அஞ்ச வேண்டாம் என்று அறிவுரை கூறுகின்றார்,

---

9. மே. கா. நூ. பக். 153.
10. மே. கா. நூ. பக். 156
11. குறள். 45
12. பாரதிதாசன் கவிதைகள் தொ. 3. பக். 156

தனித்து வரும் போது — கெட்ட
தறுதலை கண் வைத்தால்
இனிக்க நலம் கூறு — பெண்ணே
இல்லா விடில் தாக்கு! 13

ஏற்றப் பாட்டு கிராமிய இயற்கை வளத்துடன் காதலின் எளிமையோடும் விளங்குகின்றது அவன் ஏற்றம் இறைக்கின்றான். அவனருகில் அவள் பரிமாற்றம் செய்து கொள்ளுகின்றார்கள்.

கொண்டையிலே பூவும் — உன்
கோணை நெடு வாக்கும்.
தண்டையிலே பாட்டும் — உன்
கோணை நெடு வாக்கும்,
கண்ட வுடன் காதல் — நான்
கொண்டே னேஉன் மீதில் 14

அவளுடைய மனத்தினை அறிய விழைகின்றான் வார்த்தைகளால் அவள் நெகிழ்வதாக இல்லை. நல்ல வேளையாக இரண்டு சிட்டுக்கள் அருகிலுள்ள கிளையில் காதல் பேசுகின்றன. அதைச் சுட்டிக் காட்டுகிறான்.

பார் இரண்டு சிட்டுப் — பெண்ணே
பழகும் ஒன்று பட்டு 15

பெண்ணை வாழ்த்துவதுடன் முடிக்கின்றார் கவிஞர்.

நோக் கியது வையம் — பெண்ணே
[நூறு டனே] வாழி! 16

எளிய. சின்னஞ்சிறு சொற்களினால் அமைந்த இந்த ஏற்றப் பாட்டு ஆழமும் அகலமும், மென்சுவையும் கொண்டு மிளிர்கின்றது இயற்கைக் காட்சிகள், கிராமிய சூழ்நிலை ஆதவன் தோற்றம் ஒழுக்கம் முதலான அனைத்தும் தன்னகத்துக் கொண்டு. ஒரு சிறந்த இலக்கியப் பூங்காவாக இப் பாடல் — ஏற்றப் பாட்டு — திகழ்கின்றது, அழகின் சிரிப்பும், தென்றலின் இனிமையும் நாம் காண முடிகிறது.

---

13 மே. கா நூ பக் 157
14. மே. கா. நூ பக். 159
15 மே. கா. நூ. பக். 161
16 மே கா நூ. பக். 163.

இளைய பாரதம் மதிப்புரை

ஆசிரியர் : ரா பொன்ராசன்

வெளியீடு P K. புக்ஸ் மதுரை. விலை 1—80 பக்கங்கள் 54

குழந்தை எழுத்தாளர் சங்கத்தாரால் 1975 ஆம் ஆண்டில் இரண்டாம் பரிசளிக்கப்பெற்ற இப்பாடற்றொகுப்புப் புத்தகம் குழந்தைகளும் பள்ளிச்சிறார்களும் பயின்று சுவைப்பதற்காகப் படைக்கப்பட்டுள்ளதெனினும் பெரியவர்களும் சுவைக்கத்தக்கப் பகுதிகளும் காணப்படுகின்றன. குழந்தைக் கவிஞர் திரு. அழவள்ளியப்பா ஆசிரியரைப் பற்றியும் குழந்தைப்பாக்கள் பற்றியும் அழகானதொரு முன்னுரையும் தவத்திரு குன்றக்குடி அடிகளார் அன்புமிக்கதொரு வாழ்த்துரையும் தந்துள்ளனர்.

நேருமாமா நேருமாமா எங்கே போனீங்க — —
"வானவர்க்கும் பஞ்சசீலம் வழங்கப் போனீரா"
"ஞானகாந்தி போன இடந்தேடிப் போனீரா"

என்றாற் போல உணர்வும் வரலாறும் தோன்றப் பாடியுள்ள பகுதிகள் வருங்கால மன்னர்களுக்குப் பெரிதும் பயன்தரும் இவ்வாறே பல பகுதிகள் சுவையுடையனவாக உள குழந்தைப் பாக்களாயினும் தமிழ் மரபும் யாப்பும் ஓசையும் குறைவின்றி யமையவேண்டும் என்பது பாரதியார் பாரதிதாசன் போன்ற அமர கவிஞர்களின் கொள்கை என்பதை அவர் தம் பாப்பாப் பாடல்களும் இளைஞர் இலக்கியமும் காட்டுகின்றன. அவ்வகையில் இவ் ஆசிரியர் பணி திகழ வேண்டும்.

பெருங்கதையில் இசை

(டாக்டர். ஏ. என். பெருமாள்)

இசை - ஒரு விளக்கம் :

ஒலியின் வகைகள் அனைத்துக்கும் பொதுவாக 'ஒலி' என்ற சொல் அமையினும், அவற்றுள் குறிப்பிடத்தக்கனவாய் எழும் ஒலிகளை (Significant Sounds) ஓசை எனவும் இனிமையாய் இணைந்து எழுவதை (harmoniously blended Sounds) இசை எனவும் கருதியதாகக் கொள்ளலாம் 'ஓசை ஒலியெலாம் ஆனாய் நீயே' [1] என்பதில் ஓசையும் ஒலியும் வேறுபடுத்தப் பட்டுள்ளன. 'ஏழிசை ஏழ்நரம்பின் ஓசையை' [2] என்று கூறுவதில் இசையும் ஓசையும் இரண்டாகின்றன, ஆயினும் இடியோசை, அலையோசை என்பன போன்று குறட்டையொலி, சீழ்க்கையொலி, முரசொலி ஆகியவையும் குறிப்பாய் எழுவனவற்றையே குறித்து நிற்கின்றன. இவற்றை நோக்கும்போது கால ஓட்டத்தின் பயனாக ஒலியும் ஓசையும் ஒரே பொருளில் பயன்படுத்தப்பட்டுள்ளனவோ என்று கருத வேண்டியதாகிறது பெருங்கதையில் இன்னிசை வீணை (I. 38, 197) இன்னொலி வீணை (I. 40. 117) என இசையும் ஒலியும் ஒரே பொருளில் வந்துள்ளன. மேலும் 'இசை' என்பதையே வேறுபாடுகளுடன் பயன்படுத்தியுள்ளனர். 'இன்னிசை வீணையில் இசைத்தோன்' [3] எனவும் 'பறையெழுந் திசைப்ப' [4] எனவும் 'கோகிலப் பறவைகள் இசைத்தல்' [5] எனவும் வந்துள்ளமை காணின் 'இசை' என்பது பண்கலப்புடையது மாத்திரமன்றி மனத்தைக் கவர்ந்து இன்பமூட்ட வல்ல ஒலித்திரள் அனைத்தும் ஆகும் என்றாகிறது. இணையொலித் திரளின் இசைவின் பயனாக எழும் இன்னோசை ஒரு விதமான ஒழுங்குக்குக் கட்டுப் பட்டு உள்ளத்தைக் கவர்வதுடன் இன்ப உணர்வை எழச் செய்து மனத்தை ஆட்கொள்ளுமானால் அதனை இசை என்று கூறலாம்.

பெருங்கதை குறிப்பிடும் இசைக் கருவிகள் :

பெருங்கதையில் யாழ், வீணை, குழல் வளை, வயிர் ஆகிய 5 பண்ணிசைக் கருவிகளும் பறை, முழவு. முரசு, தண்ணுமை, தடாரி, குடமுழா அல்லது கடமுழா. பாண்டில் ஆகிய 7 தாளக்

கருவிகளும், மிடறுகிய மனிதக் குரலிடமும் இசையெழு தானங்களாகக் குறிப்பிடப்பட்டுள்ளன.

இவற்றுள் யாழும் வீணையும் ஒரே கருவியைக் குறிக்கும் பெயர்களோ என்று கருதும் அளவுக்கு உள்ளன உதயணனுடைய கோடபதி என்னும் யாழைக் குறிப்பிடும்போது 'தெய்வப் பேரியாழ்' (I, 48, 104) நல்லியாழ் (IV. 3, 138) வீறமை வீணை (IV 3, 129) [வனப்பமை வீணை (IV. 4. 6) என்று கூறப்படுகிறது மேலும் 'பேரியாழ்' என்பதற்கு உதயணனது வீணையின் பெயரென்று டாக்டர் உ. வே. சா உரை எழுதுகிறார். [6] யாழ்நூல் கற்றுத் தேறிய உதயணன் (I, 32. 5) வாசவதத்தைக்குத் 'தான்பயில் வீணையினைப்'' (I, 34 51) பயிற்றுவிக்க வேண்டப்படுகிறான். 'யாழ்கை வைத்தது' (I, 34) யாழ் நலம் தெரிந்தது (III, 15) 'யாழ் பெற்றது' (IV, 3) என்று காதைகள் பெயர் பெறுகின்றன அவற்றுள் 'வீணை இசைத்தல் (I 34, 62) மகர வீணை (III, 15. 23) வீறமை வீணைப்பேறு (IV, 3, 129) ஆகியவை பற்றிப் பேசப்படுகின்றன. 'செம்பொன் நல்யாழ்' (I, 37, 160) என்றும் 'தகையொலி வீணை' (I, 37, 178) என்றும் வாசவதத்தையின் யாழ் குறிப்பிடப்படுகிறது. பதுமாபதியின் யாழைப் பற்றிக் குறிப்பிடும்போது,

'மாண புணர்ந்ததோர் மகர வீணை
தரிசகன் தங்கைக் குரித்தென அருளிய

கோல நல்லியாழ் கொணர்ந்தனள் கொடுப்ப' (III, 15, 23. 25) என்று கூறப்படுகிறது. இதில் வீணை, யாழ் இரண்டும் ஒரே கருவியைக் குறிப்பதைக் காணலாம். 'குழலும் யாழும்' பல இடங்களில் அடுத்தடுத்து வருவன போன்று (I 37. 90; I, 38, 6; I, 38 174; I. 40 86) யாழும் வீணையும் ஒரு இடத்தில் கூட அடுத்துக் கூறப்படவில்லை. உதயணனின் சிறப்பினைக் கூறும்போது ஒரு முதுமகள் வீணை வித்தகன்' (III, 21, 34) என்றும் அமைச்சர் 'நல்லியாழ் வித்தகன்' (III. 21, 102–103) என்றும் போற்றியுரைத்தல் சிந்திப்பதற்கு உரிய இடங்கள், மேலும் அவன் 'வீணை வேந்தன்' (IV, 2. 79) 'யாழின் கிழவன்' (V. 4, 104) என்றும் அழைக்கப்படுகிறான். இந்தக் காப்பியத்தில் யாழ் 36 இடங்களிலும் வீணை 26 இடங்களிலும் ஒரே கருவியைக் குறிப்பனவாகப் பயன்படுத்தப்பட்டுள்ளன.

மணிமேகலையில் இந்தக் கருவி 'மகரயாழ்' [7] என்றும் 'மகர வீணை' [8] என்றும் குறிப்பிடப்பட்டுள்ளது. இதனைச்

சீவகசிந்தாமணி 'தீந்தொடை மகரவீணை' [9] என்று கூறு கிறது. திருக்கைலாய ஞான உலாவில் 'குடமுழவம் கொக்கரை வீணை குழல்யாழ்' என்றும் திருவாசகத்தில் 'இன்னிசை வீணை யினர் யாழினர் ஒருபால்' என்றும் வருவதைக் கொண்டு இந்த பக்தி நூல்கள் எழுந்த காலத்தில் யாழும் வீணையும் இருவேறு கருவிகளாக இயங்கி விட்டன என்று அறியலாம். இவற்றி லிருந்து ஒரு முடிவு காண முயலலாம். சங்க காலத்து இன் னிசைக் கருவியான யாழ் காலப் போக்கினாலும் வேற்றுக் கலாச் சாரக் கலப்பினாலும் பலவித மாற்றங்களை அடைந்து வீணை என்ற குழந்தையைப் பெற்றெடுப்பதற்கு முன்னுள்ள நிலையில் யாழென்றும் வீணையென்றும் இரு பெயரால் அழைக்கப் படுதலை காப்பிய காலத்தில் காண முடிகிறது.

பெருங்கதையில் யாழ் அல்லது வீணைக்குக் கொடுத்துள்ள சிறப்பு வேறு எந்த இசைக் கருவிக்கும் கொடுக்கப்படவில்லை. 'பண்ணமை நல்லியாழ்' (I, 34, 228) பெறற்கரும் பேரியாழ் (I, 36, 44) 'சீர்கெழு வீணை' (I. 34, 81) மணியொலி வீணை (I, 35, 101) என்று வரும் அடைமொழிகளே சான்று பகரும். தெய்வத் தன்மை பொருந்தியதாக யாழிசையை மதிப்பதினால் 'தெய்வ நல்யாழ்' (I, 37, 113) என்றும் அதற்குப் பலிக்கடன் செலுத்திப் போற்றப்படுவதினால் 'பலிகெழு நல்யாழ்' (I 37, 107) என்றும் அழைக்கப்படுகிறது.

யாழ்ப் பயிற்சி ஒருவருக்குச் சிறப்பினைத் தருவதாகும் என்று கருதிய காலம் அது. உதயணனின் கல்விப் புலமை பற்றிக் கூறும்போது பொருள் புரிநூல், உலக புராணம், சமயவிகற் பம், ஆகியவற்றுடன யாழ்நூல், நாடகப் பொருள் ஆகியவை யும் இணையாகக் கூறப்படுகின்றன. 'வீணை நவின்ற விறல்வேல உதயணன்" (III, 18 58) என்று பாராட்டும் இடத்தில் வேலை விடவும் வீணைக்கு முதலிடம் கொடுக்கப்பட்டிருப்பதைக் காணலாம் யாழிசை பயில இளவரசி ஆவலுடையள் என்பதை அரசன் பெருமையாக அமைச்சனிடம் கூறுகிறான். மங்கலக் கருவியாகிய யாழினைத் தன்மகள் பயிலத் தொடங்குவதை அரசி மனமுவந்து வரவேற்கிறாள் இவற்றிலிருந்து அந்தக் கலையும் கருவியும் அரச மரபினரால் எவ்வளவு மதிக்கப்பட்டிருந்தன என்பதை உணரலாம்.

யாழுடன் இணையும் கருவியாகக் குழல் கூறப்படுகிறது. அவ்வாறே வளையும் வயிரும் இணைத்துக் கூறப்படுகின்றன.

'பயிர்வளை அரவமொடு வயிரெடுத் தூதி
இடிமுர செறிந்த எழுச்சித் தாகி' (I. 38. 4-5)

என்று கூறுவதிலிருந்து வளை, வயிர் ஆகியவற்றிற்கு உகந்த தாளக் கருவியாக முரசினைக் கொண்டிருந்ததாக அறியமுடிகிறது

'யாழும் குழலும் அரிச்சிறு பறையும்
தாழ முழவமும் தண்ணுமைக் கருவியும்'
(I, 38, 174-175)

என்று குறிப்பிடுவதிலிருந்து யாழ், குழல் போன்ற பண்ணிசைக் கருவிகளுக்குப் பொருந்தும் தாளக் கருவிகளாக முழவம், பறை, தண்ணுமை ஆகியவற்றைப் பயன்படுத்தியதாகக் கூற இயலுகிறது முழவின தாழ்வான தாள இசை கருதித 'தாழ' என்ற அடை கொடுக்கப்பட்டதா அல்லது 'தாழ முழவம்' என்ற ஒரு வகை முழவம் இருந்ததா என்பது சிந்தனைக்கு உரியது அதனை 'மழலை முழவம்' (I, 40, 86) என்று இன்னொரு இடத்தில் அழைப்பதையும் காணலாம்.

அரசனுடைய அறிவிப்புகளை மக்களுக்குத் தெரியப்படுத்தும் போதும் அரச மரியாதை கொடுக்கப்படும் போதும் முரசு முழங்கப்படும் செய்திகள் வருகின்றன. ஆயினும் இரண்டுக்கும் வேறுபாடு உள்ளது, செய்தி அறிவிப்புக்கு முரசு மாத்திரம் 'கண்ணதிர்ந்து இயம்புகிறது'. (I, 40, 240) ஆனல் வரவேற்பானது.

'இருமயிர் முரச முருமென வுரறக்
கடமுழக் கின்னிசை இடையிடை இயம்ப'
(II, 1, 13, 14)

இனிதாக நடைபெறுகிறது. முரசின் முழக்கத்தைக் கடமுழாவின் இனிமையான ஒலி இடையிடை இசைத்து நயம்படச் செய்வதாகக் கருதலாம். கடமுழா என்பது குடம் போன்று அமைந்திருக்கும் குடமுழா என்ற தாள வாத்தியத்தைக் குறிப்பதாகக் கூறப்படுகிறது அவ்வாருயின் இக்காலத்துக் கட வாத்தியத்திற்கும் கடமுழாவுக்கும் தொடர்பு இருக்குமோ என்று எண்ணத் தோன்றுகிறது தடாரி அல்லது கிணைப்பறை என்ற தோல் கருவியின் தாளவிசை மருத நிலத்தில் எழுப்பப் படுவதாக அறிய முடிகிறது தாளம் கொட்டுவதற்குப் பாண்டில் என்ற கஞ்சத்தாளம் இருந்ததாகக் கூறப்படுகிறது. (I, 37, 93) 'பாடல் தண்ணுமைப் பாணியிற் பிழையா' (I, 44, 47) என்ற குறிப்பின் மூலம் தாளமும் பண்ணும் தவருதிணையும் தன்மை

யைக் காணலாம். 'பாணி' என்பது கையினால் தாளம் கொட்டுவதைக் குறிப்பிடுகிறது. 'சப்பாணி கொட்டுதல்' இதனுடன் பொருத்திச் சிந்திப்பதற்கு உரியதாகும்.

இசை எழுச்சிக்கான அமைப்புகள்:

யாழ்நூல் நாரத கீதக்கேள்வி (நாரத சிக்ஷை என்னும் நூல்) ஆகிய இசை நூல்களைப் பற்றிய குறிப்புக்கள் பெருங்கதையில் காணப்படுகின்றன. 'கேள்வி' என்பது யாழ்க் கருவிக்கு ஒரு பெயராக வருவதாயினும் 10 இங்கு அது இசை நூலைக் குறிப்பதாக வந்துள்ளது. இசை பயிற்சி பெறுவோர் இத்தகைய நூல்களைக் கற்றுத் தேறியுள்ளதாகக் கூறப்படுகிறது.

'இசையொடு சிவணிய யாழி னூலும்
நாடகப் பொருளும் ....' (I 32, 5-6) கற்றுச்

சிறந்தவன் உதயணன்.

'பண்ணுந் திறனுந் திண்ணிதிற் சிவணி
வகைநயக் கரணத்துத் தகைநய நவின்று
நாரத கீதக் கேள்வி நுனித்து' (IV, 3. 56-58)

அதன் காரணமாகப் புகழ் பரந்தவன் அருஞ்சுகன் என்ற அந்தணாளன்.

'பல்லவை இருந்த நல்லாசிரியர்' (I. 37, 95) இசை பயிற்றும் பணியில் ஈடுபட்டிருந்தனர். இவர்கள் பஞ்சாசாரியர் எனப் படுவார்கள்.

'ஆசில் பாடல் அமிழ்துறழ் நல்யாழ்க்
கேள்வி நுனித்த கீத வித்தகத்
தாசா ரியரோ டரங்கியன் மகளிரை
ஏடுகோ ளாளர் எனையரென் றெண்ணிப்
பேரெழுத் தோலை பெறுமுறை நோக்கி'
(I. 37, 150-155)

அணிகலன், முத்துமாலை, பட்டுக்கலிங்கம், பாசிழை முதலிய பரிசுகளைத் தகுதிக்குத் தக்கவாறு அளித்தலைக் காணலாம். இதிலிருந்து அரசனின் ஆதரவும் பாராட்டும் இசைக்கலைக்கு இருந்தனவாகக் கருதலாம். இசையாசிரியர்களும் நன்றாக மதிக்கப்பட்டு அவை நடுவில் பாராட்டப்பட்டுள்ளனர்.

இசைக் கலையைப் பெண்களோ பெரும்பாலும் கற்றதாக அறிய முடிகிறது. 'நங்கை கற்கு மங்கலக் கருவி' (I. 34, 171) என்றும் 'பைந்தொடி பயிற்றும் பண்யாழ்' (III. 14. 192)

என்றும் வரும் இடங்கள் இதனை உறுதிப்படுத்துவன. வாசவதத்தை உதயணனிடம் யாழ் கற்று அதனை அரங்கேற்றிய நிகழ்ச்சி காப்பியத்தில் சிறப்பான ஒரு இடத்தைப்பெறுவதாகும்

இசையாசிரியன் அக்கலையில் மிகவும் தேர்ச்சியுடையவனாக இருக்க வேண்டும்.

'நூலும் செவியும் நுண்ணிதில் நுனித்தே
யாழும் பாடலும் அற்றம் இன்றி
விலக்கும் விடையும் விதியின் அறிந்து
துளக்கில் கேள்வித் தூய்மையில் முற்றிச்'
(I 37, 133 - 136)

சிறந்தவனே நல்ல இசையாசிரியனாக அமைய இயலும் 'உவாத்தி' யாகிய உதயணனுக்கும் 'மாணாக்கி' யாகிய வாசவதத்தைக்குமிடை நிலவிய ஆசிரிய மாணாக்க உறவு எடுத்துக் காட்டப்படுகிறது.

'மாசில் வீணை மடமொழிக் கீந்தோன்
ஆசா னென்னும் சொற்பிறி தாமோ
அண்ணல் குமரற் கடிச்செருப் பாகென'
(I, 36, 308 - 310)

என்று கூறுவதில் மாணாக்கப் பணிவு சுட்டப்படுகிறது. 'பிற்றை நிலை முனியாது கற்றல் நன்றே' 11 என்னும் புறநானூற்றுக் கருத்து இங்கு நினைப்பதற்கு உரியது

இசை பயிற்றுவிக்கப் பாடசாலைகள் இருந்த குறிப்பும் காணப்படுகிறது

'கீத சாலை வேதிகை காக்கும்
கோல்கொள் சுற்றமொடு குமரன் புகுதர
(I, 36, 136 - 137)

என்று கூறுவதிலிருந்து இசைப் பாடசாலைப் புறத் திண்ணையுடன் அமைக்கப் பட்டிருந்ததையும் அங்கு இசைக் கருவிகள் இருப்பதினால் கோல் தாங்கியோரால் காவல் செய்யப் படுவதையும் அறிய முடிகின்றன.

'வாயிற் கூத்தும் சேரிப் பாடலும்
கோயிற் நாடகக் குழுக்களும் வருகென'
(I, 37, 88-89)

என்று அழைக்கப்பட்டிருப்பதினால் கூத்து, பாடல், நாடகம் ஆகியவற்றிற்குத் தனித்தனிக் குழு இருந்தமை புலனாகும்.

'அடுத்தொலி அரூஅ வரங்கமும் கழகமும்' (III, 4 23) என்று கூறுவதினால் இசையரங்கங்களும் கழகங்களும் இருந்தனவாக அறியலாம்.

மக்களின் இசைநுகர் தன்மையினையும் ஈடுபாட்டினையும் அறிவிக்கும் முகமாக,

'விண்ணுலகு பெறினும் விடுத்தற் காகாப்
பண்ணியல் பாணி நுண்ணிசை யோர்வார்'
(I, 44, 17 - 18)

என்று சொல்லப்படுகிறது

'யாழும் பாட்டும் யாவரும் அறிவர்' (III. 15, 48) என்று கூறுவதிலிருந்து இசைக்கலை மக்கள் மத்தியில் மிகுதியாகப் பரவி இருந்த நிலையை உணர முடிகிறது

'குழலும் யாழும் மழலை முழவமும்
முட்டின் றியம்பும் பட்டினம் ....' (I, 40, 86-87)

என்ற குறிப்பின் மூலம் நகர மக்களின் இசைக்கலை ஆர்வம் நன்கு விளக்கப்படுகிறது. நகரத்தில் இசை நிகழ்ச்சிகள் தவறாது நடைபெற்றதையும் அறிய முடிகிறது. அரசன் முதல் குடிகள் வரை அனைவரும் இசையை விரும்பினர். அரசனின் ஆதரவு இசையின் வளர்ச்சிக்குப் பெருந்துணை புரிந்தது இசைப் பயிற்சி ஒருவருக்குப் புகழாகக் கருதப்பட்டது. ஆகையினால் இசைக் கலை வளர்வதற்கும் சிறந்து விளங்குவதற்கும் ஏற்ற ஒரு அமைப்பு ஏற்பட ஏதுவானது. சமூகத்தில் இசைக் கலைக்கு மிகுந்த மதிப்பும் நல்ல ஆதரவும் இருந்துள்ளன என்பது உறுதி.

இசையால் பெருமிதம் :

இசை வல்லுநரை மக்கள் பெரிதும் மதித்துப் போற்றி வந்ததால் அவர்களுக்குப் பெருமிதவுணர்வு ஏற்பட்டதில் வியப்பில்லை. உதயணனிடம் அத்தகைய உணர்வு இருந்ததை அறிய 'வத்தவ நாடன் வாய்மையில் தருக்கும் கொற்ற வீணை' (I, 37 137 - 138) என்று கூறும் இடம் தகுந்ததாகும் யாழிசைப் பதில் வல்லவன் என்ற காரணத்தால் உதயணனை பிரச்சோதனன் போன்ற மன்னர், வாசவதத்தை, பதுமாபதி போன்ற

இளவரசிகள், நாட்டு மக்கள் ஆகிய அனைவரும் மிகச் சிறப்பாக மதிக்கின்றனர். உதயணனின் சிறப்புக்களைப் பதுமாபதிக்குக் கூறும் முதுமகள் 'யானை வணக்கும் வீணை வித்தகன்' (III, 21. 34) என்று குறிப்பிடுகிருள். எட்டி குமரனும் அருஞ்சுகனுன அந்தணுளனும் இசைத்திறம் மிக்கவர் என்பது பெருமையாகக் கூறப்படுகிறது.

'தெய்வ நல்யாழ் கையமைத் தியற்றிய' (III, 7, 56-57) நங்கை என்று வாசவதத்தைச் சிறப்பாகக் குறிப்பிடப் படுகிருள். இசையின் தேர்ச்சி ஒருவருக்குப் பெருமையளிக்கிறது அதன் பயனுகப் பெருமித உணர்வு ஏற்படுகிறது. மேலும்,

'கருவி யமைந்த புரிவளை ஆயமொடு
பல்லவை யிருந்த நல்லா சிரியர்' (I, 37, 94-95)

அனைவரும் பெருமிதத்தோடு வாழ்ந்து சிறப்பு செய்யப்பட்டனர் என்றும் கூறப்பட்டுள்ளது.

இனிமையானதும் இன்பம் பயப்பதுமாகிய இசைக்கலையின் நுணுக்கங்களையும் நுட்பங்களையும் நன்ருக அறிந்து சிறந்தவர்களை மக்களும் மன்னனும் உயர்வாக மதித்துப் பாராட்டியதிளுல் அவர்களுக்குப் பெருமையும் பெருமிதவுணர்வும் ஏற்பட்டன.

இசையால் மன இணைவு :

பெருமிதமுடையோரைப் பிறர் மதித்துப் போற்றலும் மனமுவந்து விரும்பி ஏற்றலும் உலக இயல்பே ஆகும். இசையில் வல்லவர்களை இணையத்துடிக்கும் இன்னியல் நங்கையரைப் பெருங்கதையில் காணலாம்

'அணியிழை மகளிரும் யானையும் வணக்கும்
மணியொலி வீணையும் சாபமும் மரீஇக்'
(I, 35, 100-101)

என்ற வரிகள் மூலம் மகளிர் இசைக்கு மயங்கும் தன்மை புலப்படுத்தப்படுகிறது.

வாசவதத்தை உதயணனை விரும்பியதற்கு முக்கியமான காரணம் அவனது இசைப் புலமையே ஆகும். யாழிசையை விரும்பியதுபோல் யாழிசை வல்லவனையும் விரும்புகிருள். யாழானது கொங்கு வேளும் திருத்தக்கத் தேவரும் நூலெழுதிய

காலத்திலே அரசிளங்குமரிகள் கையிலேறி அவர் மனம் விரும்பிய காதலரை அவருக்கு அளிக்கும் கருவியாயிற்று என்று கூறும் விபுலானந்த அடிகளாரின் கருத்து இங்குக் குறிப்பிடத் தக்கது [12]

'யாழும் பாட்டும் யாவரும் அறிவர்
வீழா நண்பின் இவன்போல் விரித்து
நுனித்துரை மாந்தர் இல்லென நுவன்று'
(III, 15. 48-50)

மகத நாட்டு மன்னனின் தங்கையான பதுமாபதி உதயணன் பேரில் தன் மனததைப் பறிகொடுத்து நிற்பதைக் காணலாம் உதயணனுடைய இசையைக் கேட்டதும் மைம்மலர்க் கண்ணியான பதுமாபதி மகிழ்ச்சியால் மெய்ம்மறந்து நின்ற நிலை விளக்கமாகக் கூறப்படுகிறது.

'கண்கவர் வுறூஉங் காமனிற் பின்னைத்
தும்புரு வாகுமித் துறைமுறை பயின்றோன்'
(III, 11, 287-288)

என்று உதயணனைப் பற்றோடு புகழ்கிறாள் பதுமாபதி. இசையில் வல்லவன் காமன் என்பது புராண உண்மை, சீவகசிந்தாமணியில் 'இசைத்திறத் தனங்கனே யனைய நீரினார்' [13] என்று வருவதைக் காணலாம் காதலுக்கும் இசைக்கும் நெருங்கிய தொடர்பு இருக்கிறது என்பதையே இப்புராணக் கூற்று விளக்குவதாகக் கருதலாம். அது உலக இயல்பே என்பதைக் காப்பியங்களின் மூலம் உணர்வில் வல்ல ஆசிரியப் பெருமக்கள் உணர்த்திக்காட்டுகின்றனர். உளநூல் வல்லுநர் அதை உள்ளத்தின் இயல்பாக விளக்குகின்றனர். இசைக்கு மயங்கி இணையத் துடிக்கும் தூய உள்ளங்களின் இயல்புகளைப் பெருங்கதை நயமுற விளக்கிக் காட்டுகிறது.

இசையால் வாழ்வில் இன்பம்:

இன்பமும் துன்பமும் இணைந்தது இவ்வுலக வாழ்வு இன்பமுற்ற நேரங்களில் இசையெழுப்பி மகிழ்தல் மனித இயல்புகளில் ஒன்றாகும். பொதுவாக விழாக்கள் நடத்தும் போது இசைக்கு மிகச் சிறந்த இடம் கொடுக்கப்படுகிறது.

ஆடல், பாடல், நாடகம் ஆகியவற்றில் சிறந்த குழுவினரை விழாக் காலங்களில் மன்னன் அழைக்கிறான். அவர்களுடைய கலைச் சிறப்பைக் கண்டு களித்துப் பாராட்டுகிறான்.

'தேவ கீதமொடு தேசிகந் தொடர்ந்த
வேத இன்னிசை விளங்கிழை பாட'
(I. 37 129-130)

விழாவானது இனிது நடைபெறுவதைக் காணலாம்

'முழவொடு பல்லியம் முன்றிற் றதும்ப
விழவொடு பொலிந்த அழகிற் ருகி' (II, 9, 4-5)

நகரம் விளங்குகின்ற சிறப்பும் கூறப்படுகிறது நீர்விழாவினை இன்பமாகக் கொண்டாடும் பொருட்டு.

'யாழும் குழலும் அரிச்சிறு பறையும்
தாழ முழவமும் தண்ணுமைக் கருவியும்'
(I, 38, 174-175)

மக்கள் தங்களுடன் எடுத்துச் செல்கின்றனர். வாசவதத்தை வண்டி ஏறும் போதும் உதயணன் சயந்தி நகருக்கு வருகை புரிந்த போதும் இன்னிசை எழுப்பப்படுகிறது நகர மக்கள் தங்கள் மகிழ்வினை இசை மூலம் வெளிப்படுத்திக் காட்டுவதைப் பார்க்கலாம்.

'முழவுமலி திருநகர் விழவுவினை தொடங்க (III, 5 47) என்ற இடமும் இங்கு நினைப்பதற்கு உரியது. உத்யணன் அரியணை ஏறியபொழுது,

'முழவொலி சும்மையொடு முரசங் கறங்க
விழவியல் சும்மையொடு வியனகர் துவன்றி'

(IV, 1. 40-41) விளங்கிய செய்தியும் தரப்படுகிறது.

'தாஅந் தீமெனத் தண்ணிசை முரல' (IV, 3, 78)

வடவேல் தானைவத்தவர் பெருமகன் மக்கள் மகிழ நல்லாட்சி நடத்துகிருன்.

சவரர் புளிஞர் என்ற பாலை நிலத்து மக்கள் காளிக்குப் பலிகொடுக்கும் போது இசையெழுப்பி மகிழ்ச்சி ஆரவாரம் செய்வதும் குறிப்பிடப்படுகிறது.

மாலைக் காலத்தில் பெண்கள் ஊசலாடி உவகைக் குரலில் பாடி மகிழும் காட்சி விளக்கப்பட்டுள்ளது.

'சந்தன வேலிச் சண்பகத் திடையதோர்
வேங்கையொடு தொடுத்த விளையாட் டூசல்

தூங்குபு மறலும் உழைச்சிறு சிலதியர்
பாடல் பாணியோ டளைஇப் ... ... (I, 33, 22-25)

இன்பப் பொழுது போக்குவதைக் காணலாம்.

மருத நிலத்தில் களைபிடுங்கும் உழவர் குலப் பெண்கள் பதலையில் இருக்கும் கள்ளைப் பருகிக் களிப்பின் மிகுதியால் பாடி மகிழ்வதையும் பார்க்கலாம்.

'வளவய லிடையிடைக் களைகளைக் கடைசியர்
பதலை அரியல் பாசிலை பருகிய
மதலைக் கிளியின் மழலைப் பாடலும்' (I, 48, 162-164)

என்று கூறுவதிலிருந்து இதனை அறியலாம். ஊஞ்சல் பாடலும் உழத்தியர் பாடலும் நாட்டுப் புறப் பாடல்களை நினைக்கச் செய்வன.

இவை தவிர மருதம், பாலை முதலிய நிலங்களில் வாழும் மக்கள் தங்களுக்கு உரிய இசையினை எழுப்பி மகிழும் தன்மையும் கூறப்பட்டுள்ளது. காரிகையரின் ஊடலைத் தீர்க்க இசை பயன் பட்ட தன்மை 'மகர வீணையின் மனமாசு கழீஇ' (I, 35, 218 என்ற வரியால் சுட்டப்படுகிறது

'நாடும் நகரமும் ஆடுநர் பாடுநர்
ஆடலும் பாடலும் அன்னவை பிறவும்' (V, 9, 31-32)

கூடி நிறைந்திருந்தன என்று கூறுவதினால் நாட்டு மக்கள் இசையைப் பெரிதும் விரும்பினர் என்பதையும் நகரத்தில் முட்டின்றி முறையாக இசை நிகழ்ச்சிகள் நடந்தன என்பதையும் அறிய முடிகிறது.

அரசனுடைய வாழ்வில் மாத்திரமன்றி மக்களுடைய வாழ்விலும் இசைக்கு ஒரு சிறப்பிடம் இருந்ததைத் தெளிவாகக் காணலாம். இசைக் கலை அனைவராலும் உயர்வாகக் கருதப் பட்டிருந்தது. இசைக்கும் இன்ப வாழ்வுக்கும் நெருங்கிய தொடர்பு உள்ளது.

இசை எழுப்பும் முறைகள் :

இசையினைப் பண்ணிசை என்றும் தாளவிசை என்றும் இரண்டாகப் பிரிக்கலாம். பண்ணிசை எழுப்பும் கருவிகளாக யாழ், குழல், மிடறு ஆகியவற்றைச் சிறப்பாகக் கூறலாம். பண்டைத் தமிழன் யாழைக் கொண்டே பெரும்பாலும் பண் வகைகளை விளக்கியுள்ளான் என்பதற்குச் சான்றாகத் தொல்

காப்பியத்தில் பண்வகைகளை 'யாழின் பகுதி' என்று கூறியுள்ளதைக் குறிப்பிடலாம்.[14] இத்தகைய சிறப்புப் பற்றியே 'பண்ணமை நல்லியாழ்' (I, 34, 228) தானயாழ் (I, 35, 5) என்றெல்லாம் யாழினைப் பெருங்கதைச் சிறப்பிக்கிறது.

இசை எழுப்பப்படும் போது மெய்யது பனிப்ப உள்ளமது இனிக்க ஒரு வகையான பேருவகை மனத்தில் ஏற்படுகிறது. நாற்பெரும் பண்ணும் (பாலை, குறிஞ்சி, மருதம், செவ்வழி) ஏழ் வகைப் பாலையும் (செம்பாலை, படுமாலைப்பாலை, செவ்வழிப்பாலை அரும்பாலை, கோடிப்பாலை, விளரிப்பாலை, மேற்செம்பாலை) இருபத்தொரு திறத்துடன் முழுத்திறமையாகப் பாடப்படுவதாக அறியலாம் யாழின் இன்னியம வெளிப்படுத்தப்பட்ட பின்பே கண்டத்துப் பாடல் வெளியிடப்படுவதாகக் குறிப்பிடப் படுகிறது. (I, 37, 118) சச்சபுடம் முதலிய ஐவகைத் தாளங்களில யாதொரு குறைவும் இறி இசை எழுப்பப்படுகிறது.

பண்ணிலிருந்து பிறப்பது திறம். அது மேலும் பிரிந்து வேறுபட்ட இசை நரம்பளவுகளை பெறுகிறது பண்ணுக்கு ஏழும். பண்ணியல் திறத்துக்கு ஆறும், திறத்துக்கு ஐந்தும். திறத் திறத்துக்கு நாலும் என்றவாறு நரம்பெண்கள் கூறப்படுகின்றன.[15] நரம்பு எனக் குறிப்பிடப்படுவது சுரங்களாக இருக்கலாம். அவ்வாருயின் பண் என்பது 7 சுரங்களையுடைய தோடி, நாடகப்பிரியா, அரிக்காம்போஜி, சிம்மேந்திர மத்திபம போன்ற சம்பூரண ராகங்களையும், பண்ணியல் திறம் என்பது 6 சுரங்களையுடைய ஸ்ரீரஞ்சனி, பூர்ணகாம்போஜி, மந்தாரி போன்ற சாடவராகங்களையும், திறம் என்பது 5 சுரங்களையுடைய மோகனம், பூபாளம், மத்யமாவதி, ஹிந்தோளம் போன்ற அவ்டவராகஙகளையும், திறத்திறம் என்பது இப்பொழுது வழக்கத்தில் இல்லாத 4 சுரங்களையுடைய சன்னியராகங்களாக இருக்கலாம். இன்றும் பாடப்படும பலமஞ்சரிக்கு ஆரோகணத்தில் 4 சுரமும் அடணுவுக்கு அவரோகணத்தில் 4 சுரமும் இருப்பது குறிப்பிடத்தக்கதாகும். பெருவழக்காகவுள்ள ரீதிகவுள, காபி, பயிரவி, கமாஸ் ஆகிய ராகங்களில் சுரஙகள் வக்ரமமாக உள்ளது. இத்தகைய முறைக்கு மேற்கூறிய நான்கு பிரிவுகளிலும் இடமில்லை. சுருக்கமாகக் கூறவிரும்பினுல் பண் முழுமையான கர்த்தா ராகங்களையும் திறம் சுரங்கள் குன்றிய சன்னிய ராகங்களையும் குறிப்பனவாகக் கருதலாம்.

இசை எழுப்பும் முறையும் பெருங்கதையில் கூறப்படுகிறது. தாமரை மலரைச் சூழ்ந்து ஒலிக்கும் வண்டின் ஒலி போன்றது

அது எவ்வாறு பிறந்தது என்று அறிய முடியாத நிலையில் யாழின் ஒலிக்குத் தக்க அளவில் எழுகிறது. பாடுவோரின் பல் வெளியில் தோன்ருதவாறு இவ்வொலி எழுப்பப்படுகிறது பின் ஒலியைச் சுருக்கியும் பெருக்கியும் வலித்தும் நெகிழ்த்தும் குறுக்கி யும் நீட்டியும் நிறுத்த வேண்டிய இடத்தில் நிறுத்தியும் தாள எல்லை கடவாது இசை மரபுக்கு ஒத்துப் பாடப்படுகிறது.[16] இந்த விளக்கத்தைப் பார்க்கும் போது பாடத் தொடங்கும் முன்னர் பாடகர் சுருதி கூட்டும் முறைக்கு மிகப் பொருத்தமாக உள்ளது இன்னிசைக் கடவுளை (மாதங்கி) வாழ்த்தி வணங் கியே பாடத் தொடங்குவர். பனிவிசும்பு இயங்கும் காந்தருவர் உட்பட அனைவரும் மெய்ம்மறந்து இசையைக் கேட்கிருர்கள். (I, 37, 127-128)

நூலறிவாகிய கல்வியாலும் செவியறிவாகிய கேள்வியாலும் மிகவும் கூர்ந்து அறிய வேண்டியது இசை. யாழும் பாடலும் வேறு பாடின்றி ஒத்து இயங்குதல் வேண்டும். பண்ணிசை விதிகளை நன்ருக அறிந்த குற்றமற்ற கேள்வியறிவு உடையவர் களே சிறந்த இசை வல்லுநர் ஆவர். மற்றவர்களை இசை கற்றவர்களாக யாரும் ஒத்துக் கொள்வதில்லை. I, 37, 133-136)

யாழும் குரலும் இடைதெரியாது இணைந்தே இசைத்தல் வேண்டும் என்பது குறிப்பு.

'மிடறும் நரம்பும் இடைதெரி வின்றிப்
பறவை நிழலிற் பிறர்பழித் தீயாச்
செவிச்சுவை யமிர்தம் இசைத்தலின் மயங்கி'
(III, 14, 275-277)

என்று கூறுவதில் இது செவ்வனே விளங்கும். சீவகசிந்தா மணியில் காப்பியத் தலைவனின் சிறப்பினைக் கூறும் முகமாக,

'பருந்தும் நிழலும்போற் பாட்டும் எழாலும்
திருந்துதார்ச் சீவகற்கே சேர்ந்தன ... ...'[17]

என்று கூறப்பட்டிருப்பதிலிருந்து ஒருவரே யாழ் வாசித்துக் கொண்டே பாடுவதாகவும் அறிய முடிகிறது.

முறை தவறிப் பாடுதல் மூர்க்கனுடைய செயலாகவே கருதப் பட்டது, 'ஊர்க்களி மூர்க்கன் செவ்வழிக் கீதம் சிதையப் பாடி' (I. 40, 90-91) நின்றதாகக் கூறப்படுகிறது. பண்முறை தவறல் எள்ளுதற்குரியது என்பதை,

'பகைநரம் பெறிந்து மிகையுறப் படூஉம்
எள்ளற் குறிப்பினை உள்ளகத் தடக்கி'
(III, 14, 221-222)

என்று சொல்வதிலிருந்து தெரிந்து கொள்ளலாம்.

பெருங்கதை காலத்தில் இன்னிசை எழுப்பும் முறைகள் நுண்மையான அறிவால் மிகச்சிறப்பாக அமைக்கப்பட்டிருந்தன அவற்றை நன்ருகக் கற்றுத் தேர்ந்து சிறப்புறக் கையாளத் திறமையுடையவர்களே இசை வல்லுநர்களாக மதிக்கப்படுவார்கள். இசையானது ஒரு நுண்கலையாக வளர்ந்து நன்கலையாக மதிக்கப்பட்டு இன்கலையாகச் சுவைக்கப்பட்டுள்ளதைப் பெருங்கதை மூலம் நன்ருக அறிய முடிகிறது.

இசையும் இயற்கையும்:

இசையின் ஆற்றலால் உயிரினங்கள் உணர்ச்சி உந்தப் பெறுதலையும் தம் இயற்கைக்கு மாறுபட்டு இயங்குதலையும் காணலாம். உதயணனுடைய இசையைக் கேட்டு,

'மாடக் கொடிமுடி மழலையம் புறவும்
ஆடமை பயிரும் அன்னமும் கிளியும்
பிறவும் இன்னன பறவையும் பறவா
ஆடுசிற கொடுக்கி மாடஞ் சோரக்
கொய்ம்மலர்க் காவிற் குறிஞ்சி முதலாப்
பன்மரம் எல்லாம் பணிந்தன .. ...' (III, 14, 278-283)

என்று கூறப்படுகிறது. புரு. அன்னம், கிளி முதலிய பறைவைகள் மாத்திரமன்றி மரங்களும் இசைக்குப் பணியும் இயல்பு இங்கு உணர்த்தப்படுகிறது. இன்னொரு இடத்தில்,

'எட்டி குமர னினிதி னியக்கும்
இன்னெலி வீணைப் பண்ணெலி வெரீஇ'
(I. 40, 116-117)

ஒரு மயில் அஞ்சி ஒடுங்கும் நிலை பேசப்படுகிறது. யாழொலி கேட்டு மகிழும் அசுண நன்மா பறையொலி கேட்டுத் துன்புறும் தன்மையும் குறிப்பிடப்படுகிறது. (I, 47, 241-243) வீணை இசையால் வார்கவுள் யானை அடக்கப்படுகிறது.

'கதந்தலை யழியக் கந்தோ டார்த்துச்
சாம கீத வோசையில் தணிக்கும்
நூலறி பாகர் .. ' (I, 44, 62-64)

பற்றிய செய்தியும் சொல்லப்படுகிறது.

'காழ்வரை நில்லாக் கடுங்களிற் றொருத்தல்
யாழ்வரைத் தங்கியாங்கு ... .. '[18] என்று கலித்தொகையில் கூறியுள்ளதையும் இங்கு நோக்கலாம். இசையில் இத்தகைய ஆற்றலை உணர்ந்து,

'ஐம்புல வேழத்தின் வெந்தொழில் வீயக்
கருணை வீணை காமுறத் தழீஇ'[19] என்று உருவகப் போக்கில் ஒரு தத்துவத்தை ஞானாமிர்தசாகரம் விளக்குவதையும் காணலாம். இவற்றிலிருந்து உயிரினங்களை ஓரளவு கவரவும் கட்டுப்படுத்தவும் இசைக்கு ஆற்றல் உள்ளது என்ற உண்மை அறிவுறுத்தப்படுகிறது.

இசையும் காப்பியமும்:

பெருங்கதையின் காப்பிய அமைப்புக்கு இசை எந்த அளவுக்குத் துணை செய்கிறது என்பதைச் சிந்திக்கலாம். பொதுவாக ஆடல் பாடல் ஆகிய இரண்டும் எல்லா வகைக் காப்பியங்களிலும் இடம் பெற்றுள்ளன ஆயினும் சிறப்பிடம் பெறுவதிலும் காப்பிய வளர்ச்சிக்கு உதவுவதிலும் வேறுபட்டுக் காணப்படுகின்றன. மாதவியின் கானற்பாணி சிலப்பதிகாரக் கதைக்கு ஒரு திருப்பு முனையாக அமைகிறது. சீவகசிந்தாமணியில் இசையானது காப்பியத்தின் சுவைப் பகுதிக்குத் துணையாக உள்ளது. பெருங்கதையில் இசையின் பங்கு என்ன என்பது ஆய்வுக்கு உரிய ஒன்றாகும்.

காப்பியத் தலைவன் இசைக் கலையில் வல்லவன். யாழ் நூல் கற்று யாழ் வாசிப்பதில் தலை சிறந்தவன் இசைப் பயிற்சி அளிப்பதில் திறமையுடையவன் இனிமையான இசை எழுப்பிக் கேட்டோர் அனைவரையும் கவர்ந்தவன். முதன் முதலில் பிரச்சோதன மன்னன் உதயணனை விரும்பக் காரணம் அவனது இசைப் புலமையே ஆகும். வாசவதத்தைக்கு இசைப் பயிற்சி அளிக்க அமர்த்தப்படுகிறான். இருவரது காதலும் சிறக்க அது ஏதுவாகிறது. இதுவரை இசையே கதையை வளர்த்துள்ளது மகத நாட்டு அரசனின் தங்கையான பதுமாபதியும் உதயணனின் இசைக்கு மயங்கியே அவனை மணக்க விரும்புகிறாள். இரண்டு அரசகுல மங்கையரின் மயக்கத்துக்கு இசையே காரணம் ஆகிறது ஆனால் இந்த இசையால் கதையின் போக்கில் எந்தவிதமான பெருந்திருப்பமும் ஏற்பட்டதாகத் தோன்றவில்லை. ஆயினும் காப்பியத்தின் வளர்ச்சிக்குப் பயன்பட்டுள்ளது.

உதயணனுடைய புகழ்பெற்ற யாழான கோடவதியைப் பயன்படுத்திக் காப்பியத்தில் சில குறிப்புக்களை ஆசிரியர் புலப் படுத்த முயன்றுள்ளார் என்று கருத இடம் உள்ளது வாசவ தத்தையைப் பிடிமேலேற்றிக் கொண்டு உதயணன் விரைகிருன். பல நிலங்களைக் கடந்து பாலை நிலத்துக்கு வருகிருன் இங்கு அவன் சவரர் புளிஞர் கையில் சிக்கித் திகைக்கவேண்டிய அவல நிலை ஏற்படப் போகிறது. இதுவரை இடுக்கண்களை எளிதில் கடந்து வந்த உதயணன் இனிமேல் இடருற்றுத் தவிக்கப் போகிருன். பிறருடைய உதவி அவனுக்குத் தேவைப்படும் காலம் வருகிறது. இத்தகைய நிலை ஏற்படுவதற்குச் சற்று முன்பாக அவன் உயிர்போல் கருதிக் காத்து வந்த யாழ் அவனது கையைவிட்டு நீங்கும் சூழ்நிலை அமைக்கப்படுகிறது. கோடவதி யாழானது,

'ஓர்ப்பில் காலை உதயண குமரனை
நீப்பிட மிதுவென நினைப்பது போல
பஞ்சுரம் பழுனிய பண்முறை நிற்ப
வெஞ்சுரக் கான்யாற்று வேயோடு பிணங்கிக்
கொய்தகை பொதும்பர்க் கையகன் றொழிய'
(I, 52, 87-91)

பிடியானது உதயணனைச் சுமந்து கொண்டு வெகு வேகமாக ஓடுகிறது. யாழை எடுத்துக் கொள்ள முடியாத அளவுக்கு நெடுந் தூரம் கடந்து விட்டது. திடீரென்று அவனுக்கு ஓர் அதிர்ச்சி தோன்றுகிறது. பின் ஒரு தேர்ச்சி

'சென்றது கடிதினிச் செய்திறன் இதன்மாட்
டொன்று மில்லை உறுதி வேண்டின்
தந்த தெய்வம் தானே தருமெனப்
பின்னிலை வலித்து முன்னிலை கூறிய
இன்னுப் போகுதற் காகும் பொழுதெனத்
துன்னுர்க் கடந்தோன் தோன்றக் கூறி
(I. 52, 95-100)

மேலே விரைகின்ருன். விரைவில் சவரர் புளிஞர் கையில்பட்டு நண்பர்களின உதவியால் தப்புகிருன். அவனைச் சுமந்து ஓடிய பிடி வீழ்ந்து இறக்கிறது யாழை இசைத்துச் சிறப்புக்குமேல் சிறப்புப் பெற்றவன் அதனை இழந்தபின் துன்பத்துக்குமேல் துன்பம் வரப் பெறுகிருன் தந்த தெய்வம் தானே தருமென்ற நம்பிக்கை உணர்வும் பின்னிலை வலித்து முன்னிலை கூறிய முறையும் யாழின் இழப்பால் விளக்கப்படுகிறது.

கோடபதி யாழினைப் பிரமசுந்தர முனிவரால் உதயணன் முன்பு 'வரத்திற் பெற்றதாகக்' (II. 11, 154) கூறப்படுகிறது. பின்பு அருஞ்சுகன் என்ற அந்தணாளன் மூலம் திரும்பப் பெறுகிறான் அதனால் உதயணனின் இன்பத்துக்கு அளவே இல்லை. பின்னர் அவன் வாழ்விலும் துன்பம் நீங்கி இன்பம் படரத் தொடங்கியது. தான் இழந்த வாசவதத்தையைத் திரும்பப் பெறுகிறான் அவனைப் பகைத்த பிரச்சோதனன் சீர்வரிசையுடன் தூது அனுப்பி நல்லுறவின் இன்னிசையை மீட்டுகிறான். உதயணனின் வாழ்வில் இனிமையும் இசைவும் இணைந்து தழைக்கின்றன.

காப்பிய ஆசிரியர் இசை பற்றிய செய்திகளை உவமையாக இணைத்துக் கூறித் தன் படைப்பிலக்கியத்தை உணர்ச்சி உந்தல் மிகவே வளர்த்துச் செல்வதைக் காணலாம். திருமதேவி தன் மகளின் இசையாற்றலை அறிந்ததும் மகிழ்ச்சியில் திளைக்கிறாள். பின்னர் அவள் பிரிக்கப்பட்டுவிட்டதை அறிந்ததும் வருத்தத்தில் திகைக்கிறாள். அவளுடைய இரு மாறுபட்ட நிலைகளையும் விளக்கும் உவமை சிந்திக்கத் தக்கது.

'இசைகொள் சீறியா ழின்னிசை கேட்ட
அசுண நன்மா வந்நிலை கண்ணே,
பறையொலி கேட்டுத்தன் படிமறந் ததுபோல்'
(I, 47, 241-243)

அரசியின் மன நிலை மாறிமாறி அமைந்தது.

'அரவ வண்டினம் யாழென ஆர்ப்ப' (V. 2, 18) என்று கூறும் இடமும் கருதுவதற்கு உரியது இடை வரையில் வீழும் அருவி போன்று இம்மென இசைக்கும் குடமுழா என்று கூறப்படுகிறது. இடைமலையில் விழுந்து சிதறும் ஒலியே இங்குக் குறிப்பிடப்படுகிறது (III, 14, 186-187) நீர்ப்பரப்பு சிறிது அசைய நிறைந்துள்ள சுனைக்கு அறைவாய் முரசின் அதிர்கண் உவமையாகச் சொல்லப்படுவது நுட்பமாக உள்ளது
(II, 12 53-54)

இத்தகைய உவமைகள் காப்பிய நடைக்கு உயர்வையும் சிறப்பையும் கொடுக்கின்றன. கிடைத்துள்ள பெருங்கதைப் பகுதியைப் பொறுத்தவரை இசையானது காப்பியக் கட்டுக்கோப்புக்கு ஓரளவே துணைபுரிவதாயினும் சுவைகூட்டும் பங்கில் மேம்பட்டு விளங்குகிறது. காப்பியத் தலைவன் தலைவி ஆகிய இருவரையும் இணைவிப்பதோடு இருவரின் பெருமைக்கும்

காரணமாக விளங்குகிறது. உதயணனின் வாழ்வில் யாழுக்கும் அதன் இசைக்கும் ஒரு சிறந்த இடம் இருப்பது போன்று பெருங்கதையிலும் அவற்றிற்குத் தகுந்த இடம் உறுதியாகக் கொடுக்கப்பட்டுள்ளது.

முடிவுரை :

பெருங்கதை காலத்தில் இசைக்கு இருந்த பெருமை, சிறப்பு ஆகியவற்றை இக்காப்பியம் தெளிவாக அறிவிப்பதுடன் அக் காலத்து இசையின் அமைப்பு முறைகளையும் இசை எழுப்பும் பாங்கினையும் ஓரளவு தெரிவிக்கின்றது.

அடிக்குறிப்புக்கள் :

1. தேவாரம், 6, 252, 1.
2. ,, 7. 83, 6.
3. திருவாசகம், 3, 35.
4. கலித்தொகை, 104, 29.
5. கந்தபுராணம், நாட்டுப்படலம், 44.
6. பெருங்கதை, உ, வே. சா. உரை, ப. 231.
7. மணிமேகலை, 4, 56.
8. மணிமேகலை, 19, 25.
9. சீவகசிந்தாமணி கந்தருவதத்தை, 608.
10. விபுலானந்த அடிகள், யாழ் நூல், ப. 52.
11. புறநாநூறு, 183, வ. 2.
12. விபுலானந்த அடிகள், யாழ் நூல், ப 38,
13. சீவகசிந்தாமணி, 659.
14. தொல், அகம், 15
15. அ இராகவன். இசையும் யாழும், (1971), ப. 43.
16. பெருங்கதை I. 37, 119-126.

 'எரிமலர்ச் செவ்வா யெயிறுவெளிப் படாமைத்
 திருமலர்த் தாமரைத் தேன்முரன் றதுபோற்
 பிறந்துழி யறியாப் பெற்றித் தாகிச்
 சிறந்தியம் பின்குரற் றெளிந்தவ ணொழுவச்
 சுருக்கியும் பெருக்கியும் வலித்தும் நெகிழ்த்தும்
 குறுக்கியும் நீட்டியும் நிறுப்புழி நிறுத்தும்
 மாத்திரை கடவா மரபிற் றாகிக்
 கொண்ட தானங் கண்டத்துப் பகாமை.'

17. சீவகசிந்தாமணி, 730.
18. கலித்தொகை, 2.
19. ஞானமிர்தம், 4